


# தின பூமி

thinaboomi.com








**சிறைபிடிக்கப்பட்ட கப்பலில் உள்ள 16 இந்தியர்கள், மாலுமிகளை விடுவிக்க ஈரான் அரசு முடிவு**

...2-ம் பக்கம்

**அடுத்த கல்வி ஆண்டு முதல் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் ஆண்டுக்கு 2 பொதுத்தேர்வுகள்**

...3-ம் பக்கம்

**உலகக்கோப்பை வில்வித்தையில் 3 தங்கங்களை வென்றது இந்தியா: இறுதிக்கு முன்னேறினார் சுரேகா**

...7-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச்செயலகத்தில், தமிழ்நாட்டில் கோடை காலத்தில் மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் பெரியசாமி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து, கோடைகாலத்தில்

# மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க வேண்டும்

## அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, ஏப். 28-

கோடை காலம் என்பதால் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வதை உறுதி செய்ய வேண்டும் என அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அனைத்து துறையும் ஒருங்கிணைந்து செயல்பட்டு குடிநீர் பிரச்சனை நிலவக்கூடிய அனைத்து பகுதிகளுக்கும் சென்று, உடனடியாக தீர்வு காண வேண்டும் எனவும் அதிகாரிகளிடம் தெரிவிதுள்ளார்.

**வெயிலின் தாக்கம்...**

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து கொண்டே இருக்கிறது. பொதுவாக கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும். ஆனால் இந்த ஆண்டு கோடை காலம் தொடங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளது.

**அறிவுரைகள்...**

இந்நிலையில் வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை பல அறிவுரைகளை வழங்கி வருகிறது. மேலும் வெப்ப அலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அதிகமான நீர்சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

**நீர்த்தேக்கங்கள்...**

தமிழ்நாட்டில் கடந்த சிலநாட்களாகவே பல இடங்களில் வெயில் சதமடித்து 100 டிகிரி பாரான்ஹூட்டை கடந்துள்ளது. அதிகபட்சமான ஈரோட்டில் வெயில் 107 டிகிரி பாரான்ஹீட்டை கடந்து பதிவானதால் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கோடை வெயிலின் காரணமாக சென்னையைச் சுற்றியுள்ள முக்கியமான நீர்த்தேக்கங்களில் கடந்தை ஆண்டைவிட இந்த ஆண்டு கொள்ளவு சிறிய அளவில் குறைந்துள்ளது.

**ஆலோசனை கூட்டம்...**

இந்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தண்ணீர் தட்டுப்பாட்டை தடுக்கவும் தடையின்றி தண்ணீர் வழங்கவும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி மற்றும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்ஷேனா உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் பேசியதாவது:-

**குறைந்த அளவு மழை**

கோடை காலமானது இரண்டு விதமான நெருக்கடிகளை ஏற்படுத்தும். ஒன்று அதிகப்படியான வெப்பம். இன்னொன்று குடிநீர் தேவை அதிகரிப்பு. வெப்ப அலை பிரச்சனை குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு செய்தேன். விரிவான அறிக்கையை பொதுமக்களுக்கு வெளியிட்டேன். அடுத்து குடிநீர் தேவைகள் குறித்த ஆலோசனைக் கூட்டமாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வடகிழக்குப் பருவமழை காலத்தில், தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் அதிக மழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போதிலும், மாநிலத்தின் பிற பகுதிகளில், குறிப்பாக நீர்ப்பிடிப்பு பகுதிகளாக விளங்கக்கூடிய தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் குறைந்த அளவு மழை பெய்தது. இதனால் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறைச் சூழல் குறித்து, தலைமைச் செயலாளர் அவர்களும், பிற துறைச் செயலாளர்களும் விளக்கினார்கள்.

**மழை குறைவாகவே...**

இந்த நிலையில், தென்மேற்கு பருவமழை காலத்திலும், முதல் ஓரிரு மாதங்களில் மழையளவு எதிர்பார்ப்பதை விட குறைவாகவே இருக்க கூடும் என்று இந்திய வானிலை மையம் குறிப்பிட்டுள்ளது. எனவே, தற்போது அணைகளில் உள்ள நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, அடுத்த இரண்டு மாதங்களுக்கு குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய

(கடைசி பக்கம் பார்க்க)

# தமிழ்நாடு அரசு கேட்ட நிதியை மத்திய அரசு கொடுத்ததில்லை

## எடப்பாடி பழனிசாமி விமர்சனம்

சேலம், ஏப். 28-

இதுவரை தமிழக அரசு கேட்ட நிதியை மத்திய அரசு கொடுத்ததே இல்லை என்று அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

தமிழகத்தை பல்வேறு புயல்கள் தாக்கி இருக்கின்றன. ஆனால் மாநில அரசு கேட்ட நிதியை மத்திய அரசு இதுவரை கொடுத்ததில்லை. தி.மு.க. ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் போது கேட்ட நிவாரணம் கிடைக்கவில்லை என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சேலம் மாவட்டம் எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் பகுதியில் நீர்மோர் பந்தலை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று திறந்து வைத்தார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழகத்தில் இதற்கு முன்பாக பல புயல்கள் வந்துள்ளன. எந்த அரசு புயல் நிவாரணம் கேட்டு மத்திய அரசுக்கு புள்ளி விவரத்துடன் நிதி கேட்டபோது, குறைத்து தான் கொடுப்பார்கள். தமிழக அரசு கேட்ட நிதியை மத்திய அரசு கொடுத்ததே கிடையாது.

காங்கிரஸ் மத்தியில் ஆட்சியில் இருந்த போது, தி.மு.க. மத்தியில் அங்கம் வகித்த காலங்களிலும் புயலால் தமிழகம் பாதிக்கப்பட்டது. அப்போதும் தி.மு.க. கேட்ட நிதியை மத்திய அரசு விடுவிக்கவில்லை. மாநில அரசு கேட்ட நிதியை இதுவரை மத்திய அரசு கொடுத்ததில்லை.

மத்தியில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியில் இருந்த போது தி.மு.க. அரசு நிதியை வாதாடி பெறவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த போது எத்தனை புயல்கள் வந்தன. அப்பொழுது கேட்ட நிதியையும் மத்திய அரசு கொடுக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் மேட்டூர் அணை தூர்வரப்பட்டது.இதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் கொண்டுவரப்பட்டு செயல்படுத்தப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்கு பிறகு கிடப்பில் போடப்பட்டது. மேட்டூர் அணை தூர்வாரப்பட வேண்டும். வண்டல் மண் அதிகமாக தேங்கியுள்ளது. மேட்டூர் அணை தூர்வாரப்பட்டால் கூடுதலாக தண்ணீர் தேக்கி வைக்கப்படும்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்துக்கு கொண்டுவரப்பட்ட குடிமராமத்து திட்டம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நிறுத்தப்பட்டது. இந்த திட்டம் தொடரப்பட்டிருந்தால் மழைக் காலங்களில் ஏரிகளின் நீர் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். தற்போது கோடை காலத்தில் அது பயனுள்ளதாக இருந்திருக்கும்.

மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரிநீரை நீரேற்று திட்டத்தின் மூலமாக நூறு ஏரிகளில் நிரப்பு இருந்தால், கோடை காலத்தில் பயனுள்ளதாக இருந்திருக்கும். இதையெல்லாம் தி.மு.க. அரசு செய்ய தவறி விட்டது.

நாட்டில் நடைபெறும் பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள், அரசின் கவனத்துக்கு எடுத்து வைக்க வேண்டும். நல்ல எதிர்க்கட்சி மக்களின் பிரச்சினைகளை அரசின் கவனத்துக்கு எடுத்து வைத்தால் தான், அரசு கவனமாக செயல்பட்டு தடுத்து நிறுத்தும். இவ்வாறு அவர் கூறினார்.

### வாக்காளர் பட்டியலில் பலரின் பெயர்கள் மாயம்:

# கோவை தேர்தல் முடிவை நிறுத்தி வைக்க வேண்டும்

## உயர் நீதிமன்றத்தில் பொதுநலன் வழக்கு

சென்னை, ஏப். 29-

கோவை பாராளுமன்ற மக்களவை தொகுதியில் பெயர் நீக்கிய வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் இணைத்து வாக்களிக்க உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தொடரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த வாரம் மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. அப்போது கோவை மாவட்டத்தின் பல்வேறு வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் ஏமாற்றமடைந்த மக்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், கோவை பாராளுமன்ற மக்களவை தொகுதியில் பெயர் நீக்கிய வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் இணைத்து வாக்களிக்க உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தொடரப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் மருத்துவராக பணியாற்றி வரும், கோவையைச் சேர்ந்த சுதந்திர கண்ணன் என்பவர் இந்த பொதுநலன் மனுவை தாக்கல் செய்தார்.

வாக்களிக்கும் வரை தேர்தல் முடிவை அறிவிக்கக் கூடாது எனவும், சுதந்திர கண்ணன் பொது நல மனுவில் தெரிவித்துள்ளார். 2019, 2021-ல் தேர்தல்களில் வாக்களித்த நிலையில் இந்த முறை பெயர் நீக்கப்பட்டுள்ளது.

தங்கள் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வாக்களர்களின் பெயர்களும் நீக்கப்பட்டுள்ளன என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தமனு மீதான விசாரணை விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மிக்ஜாம் புயல் மற்றும் வெள்ள பாதிப்புகள்:

# தமிழ்நாட்டிற்கு ரூ.276 கோடி நிதி விடுவித்தது மத்திய அரசு

புதுடெல்லி, ஏப். 28-

மிக்ஜாம் புயல், வெள்ள பாதிப்புகளுக்கு தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி முதல் கட்டமாக ரூ.276 கோடி நிதியை விடுவித்துள்ளது.

மிக்ஜாம் புயல், வெள்ள பாதிப்புகளுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக்ஜாம் புயல் நிவாரண நிதியாக ரூ.285 கோடி வழங்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதேபோல, கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுக்கு நிவாரண நிதியாக ரூ.397 கோடி வழங்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் முதல் கட்டமாக ரூ.285 கோடி மிக்ஜாம் புயல் நிதியில் இருந்து ரூ.115.45 கோடியும், ரூ.397 கோடி வெள்ள பாதிப்பு நிதியில் இருந்து ரூ.160.61 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது. கடந்த 24-ம் தேதி மத்திய உள்துறை அமைச்சகம் வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் மாநில அரசின் கணக்கிற்கு ரிசர்வ் வங்கி உடனடியாக நிதியை விடுவிக்க மத்திய நிதி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

# அரசு பஸ்களில் குறைகளை உடனே சரி செய்ய வேண்டும்

## தமிழக போக்குவரத்துத்துறை உத்தரவு

சென்னை, ஏப். 28-

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பேருந்துகளையும் 48 மணி நேரத்தில் ஆய்வு செய்து குறைகள் இருந்தால் உடனடியாக சரி செய்ய என்று அனைத்து மாவட்ட போக்குவரத்து மேலாண் இயக்குநர்களுக்கு தமிழக போக்குவரத்துத் துறை உத்தரவிட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து ஸ்ரீரங்கம் நோக்கி ஒரு அரசு டவுன் பேருந்து புறப்பட்டது. இதில் 20-க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். இந்த பேருந்து, பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு கலையரங்கம் தாண்டி வளைவில் திரும்பியது. அப்போது எதிர்பாராத விதமாக அந்த பஸ்ஸின் நடத்துநர் இருக்கை நட்டு போல்டு கழன்று, அதில் அமர்ந்திருந்த நடத்துநர் பஸ்சுக்கு வெளியே தூக்கி வீசப்பட்டார்.

இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதைப் பார்த்து பயணிகள் கூச்சலிட உடனே டிரைவர் பேருந்தை நிறுத்தினார். பின்னர் காயத்துடன் கிடந்த நடத்துநரை மீட்டு அருகாமையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஓடும் பேருந்தில் இருக்கை கழன்று நடத்துநர் வெளியே தூக்கி வீசப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு பலர் கண்டனம் தெரிவித்து புதிய பேருந்துகளை தமிழ்நாடு அரசு வாங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

இந்நிலையில் தமிழகத்தில் உள்ள பேருந்துகள் எவ்வாறு இயங்குகிறது என்பது தொடர்பாக தமிழ்நாடு தலைமை செயலாளர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு போக்குவரத்துக்கு துறையானது ஒரு விரிவான உத்தரவை அனைத்து போக்குவரத்து மேலாண் இயக்குநாகளுக்கும் வழங்கியுள்ளது.

அதன்படி தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து பேருந்துகளையும் '48 மணி நேரத்தில் ஆய்வு செய்து குறைகள் இருந்தால் உடனடியாக சரிசெய்ய வேண்டும். அதன் ஆய்வு தொடர்பான அறிக்கையை போக்குவரத்து செயலாளரிடம் சமர்ப்பிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் விரைவு போக்குவரதது கீழ் இயங்கப்படும் விரைவு பேருந்துகள் மற்றும் அரசு போக்குவரத்து கழகத்தின் கீழ் இயங்கப்படும் வெளியூர் பேருந்துகள் சென்னையில் இயங்கப்படும் மாநகர பேருந்து உள்ளிட்ட 20,000 பேருந்துகளை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் அதிகரிக்கும் வெப்பம்:

# பொது இடங்களில் ஓஆர்எஸ் கரைசல் பாக்கெட்டுகளை வழங்க உத்தரவு

சென்னை, ஏப். 28-

அதிகரிக்கும் வெப்பத்தால் பொது இடங்களில் ஓஆர்எஸ் கரைசல் பாக்கெட்டுகள் வழங்க வேண்டும் என சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.


தமிழகம் முழுவதும் கோடை வெயில் வாட்டி வதைத்து வருகிறது.இந்த ஆண்டு கோடை காலம் தொடங்கும் முன்பே வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கி விட்டது. கடந்த மார்ச் மாதத்தில் இருந்தே சுமார் ஒரு மாத காலமாக கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது.இந்த ஆண்டு வழக்கத்தை விட வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும், அடிக்கடி வெப்ப அலையும் வீசும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து வருகிறது. அதற்கு ஏற்பவே வெயிலின் உக்கிரமும் தினமும் அதிகரித்து வருகிறது.சென்னை உள்பட தமிழகம் முழுவதுமே வெப்பம் அதிகரிப்பால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், தமிழகத்தில் அதிகரிக்கும் வெப்பத்தால் பொது இடங்களில் ஓஆர்எஸ் கரைசல் பாக்கெட்டுகள் வழங்க வேண்டும் என சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது. மேலும் கடும் வெப்பம் காரணமாக மக்களுக்கு உடல் சார்ந்த பாதிப்புகள் ஏற்படக் கூடும் .உடலின் நீர் சம நிலையை மேம்படுத்த மாவட்டம் தோறும் பல்வேறு பகுதிகளில் ஓஆர் எஸ் கரைசல் பாக்கெட்டுகள் வழங்க வேண்டும் .ஜூன் 30ஆம் தேதி வரை மாவட்ட வாரியாக பொதுமக்களுக்கான மறு நீரேற்று மையங்களை அமைக்கவும் அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -609.28 | -150.40 |
| பாயிண்ட் 73730.16 | பாயிண்ட் 22419.25 |



**தங்கம்**
1 சவரன் ₹54,160
1 கிராம் ₹6,770



**வெள்ளி**
1 கிலோ ₹87,500
1 கிராம் ₹87.50

**டாலர்** ₹83.40

**பெட்ரோல்** ₹101.57
**டீசல்** ₹93.18



### சிறைபிடிக்கப்பட்ட கப்பலில் சிக்கிய

# 16 இந்தியர்கள், மாலுமிகளை விடுவிக்க ஈரான் அரசு முடிவு

**டெக்ரான், ஏப். 28-**

ஈரான் ராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்ட சரக்கு கப்பலில் இருந்த 16 இந்தியர்கள் மற்றும் மாலுமிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க ஈரான் அரசு முடிவு செய்துள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே மோதல் முற்றியுள்ள சூழலில் இஸ்ரேலுடன் தொடர்புடைய எம்.எஸ்.சி. ஏரீஸ் என்ற சரக்கு கப்பலை ஈரானின் கடற்படையான இஸ்லாமிய புரட்சிக் காவல் படை கடந்த 13-ம் தேதி சிறைபிடித்தது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து சரக்குகளை ஏற்றிக் கொண்டு அக்கப்பல் மும்பை ஜவஹர்லால் நேரு துறைமுகத்துக்கு வந்து கொண்டிருந்தது. அந்த கப்பலில் 25 மாலுமிகள் இருந்ததாகவும், அவர்களில் 17 பேர் இந்தியர்கள் என்றும் தகவல் வெளியானது.

இதனிடையே ஈரான் ராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்ட சரக்கு கப்பலில் இருந்த 17 இந்தியர்களில் ஒருவரான பெண் பணியாளர் ஆன் தேஸ்ஸா ஜோசப் கடந்த 18-ம் தேதி பாதுகாப்பாக கொச்சி திரும்பினார். மேலும் கப்பலில் சிக்கியுள்ள 16 இந்தியர்களுடன் டெக்ரானில் உள்ள இந்திய தூதரகம் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் சிறைபிடிக்கப்பட்ட கப்பலில் உள்ள அனைத்து மாலுமிகளையும் விடுவிக்க ஈரான் முடிவு செய்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில் கப்பலில் உள்ள மாலுமிகளை விடுவிக்க முடிவு செய்துள்ளதாகவும், இது குறித்து டெக்ரானில் உள்ள சம்பந்தப்பட்ட தூதரக அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் கப்பலில் சிக்கியுள்ளவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நைனிடாலில் காட்டுத் தீ: அணைக்க ராணுவ உதவி

**நைனிடால், ஏப். 28-**

உத்தரகாண்ட் மாநிலம் நைனிடால் பகுதியில் காட்டுத்தீ பரவி வரும் நிலையில் ராணுவத்தின் உதவியோடு தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் அந்த மாநில அரசு ஈடுபட்டு வருகிறது.

உத்தராகண்ட் மாநிலம், நைனிடால் மலைப் பகுதியில் வெப்பத்தின் காரணமாக காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இது கொஞ்சம் கொஞ்சமாக பரவி நைனிடால் நகரை அடைந்துள்ளது. இந்த தீயை அணைக்கும் பணியில் மாவட்ட நிர்வாகம், தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதையடுத்து அவசர நடவடிக்கையாக உத்தராகண்ட் அரசு, இந்திய ராணுவத்தின் உதவியை நாடியுள்ளது. அதன்பேரில் ஹெலிகாப்டர் மூலம், ஏரியிலிருந்து நீர் எடுத்துச் செல்லப்பட்டு, காட்டுத் தீ எரிந்து வரும் பகுதியில் ஊற்றி தீயை அணைக்கும் பணிகள் நடந்து வருகிறது.

நைனிடால் மாவட்ட தலைமையகத்திற்கு அருகில் உள்ள காட்டில் தீ ஏற்பட்டுள்ள நிலையில், பைன்ஸ் பகுதியில் அமைந்துள்ள ஹைகோர்ட் காலனி மக்களுக்கு இது பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதனால் அப்பகுதி போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

### ரேசன் கடைகளில் செறிவூட்டப்பட்ட

# அரிசியை வழங்கும் முன் மக்களுக்கு தெளிவுபடுத்த பிரேமலதா கோரிக்கை

**சென்னை, ஏப். 28-**

உரிய முறையில் விழிப்புணர்வு செய்து தெளிவுபடுத்திய பிறகுதான் மக்கள் பயன்பாட்டிற்கு செறிவூட்டப்பட்ட அரிசியை கொண்டு வர வேண்டும். அதுவரை பொது விநியோகத்திற்கு தமிழக அரசு இந்த அரிசியை அனுமதிக்க கூடாது என்று தே.மு.தி.க. பொது செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ரேசனில் செறிவூட்டப்பட்ட அரிசியை எப்படி விநியோகம் செய்கிறீர்கள் என மத்திய அரசிடம் கோர்ட்டு கேள்வி எழுப்பி உள்ளது. அதற்கு தலசீமியா, அனீமியாவால் பாதித்தவர்கள் செறிவூட்டப்பட்ட அரிசியை உண்ண வேண்டும் என டாக்டர்கள் பரிந்துரைத்துள்ளதாகவும், அது குறித்த விளம்பரங்கள் ரேசன் கடைகளில் வைத்துள்ளதாகவும் மத்திய அரசு கூறி உள்ளது.

அப்போது அரிசியை உண்ணக் கூடாதவர்களை எப்படி கண்டறிவீர்கள் என கோர்ட்டு கேள்வி எழுப்பி உள்ளது. அதுவும் ரேசன் கடை என்றாலே ஏழை மக்கள் அதிகம் அரிசி வாங்கி பயன்படுத்துவது வழக்கம். அதனால் யார் இந்த அரிசியை பயன்படுத்தலாம். பயன்படுத்தக் கூடாது என்பதில் அரசு கவனமாக செயல்பட வேண்டும் என அறிவுறுத்திய கோர்ட்டுக்கு தே.மு.தி.க. சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே தரம் பிரித்து இந்த அரிசியை யார் உண்ண வேண்டும் என உரிய முறையில் விழிப்புணர்வு செய்து தெளிவுபடுத்திய பிறகுதான் மக்கள் பயன்பாட்டிற்கு செறிவூட்டப்பட்ட அரிசியை கொண்டு வர வேண்டும்.

அதுவரை பொது விநியோகத்திற்கு தமிழக அரசு இந்த அரிசியை அனுமதிக்க கூடாது. இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மீண்டும் உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, ஏப். 28-**

தொடர்ந்து 2வது நாளாக தங்கம் விலை நேற்றும் உயர்ந்து விற்பனையானது.

தங்கத்தின் விலை கடந்த ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து ஏற்ற இறக்கத்தோடு காணப்படுகிறது. இதற்கிடையே கடந்த ஒரு மாதமாக தங்கம் விலை கிடுகிடுவென அதிகரித்து ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்தை கடந்தது. நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு எட்டாக் கனியாகிவிடும் என்று நினைக்கத் தோன்றும் அளவுக்கு தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்தது. நேற்று முன்தினம் தங்கம் விலை சவரனுக்கு ரூ.360 உயர்ந்த நிலையில், நேற்றும் மேலும் உயர்ந்தது.

அதன்படி, சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு நேற்று ரூ.120 உயர்ந்து ரூ.54,160-க்கு விற்பனையானது. தங்கம் கிராமுக்கு ரூ.15 உயர்ந்து ரூ.6,770-க்கு விற்பனையானது. வெள்ளியின் விலை கிராமுக்கு 50 காசுகள் குறைந்து ரூ.87.50-க்கு விற்பனையானது.

### கலிபோர்னியாவில் கார் விபத்து:

# கேரளாவை சேர்ந்த ஒரே குடும்பத்தினர் 4 பேர் பலி

**கலிபோர்னியா, ஏப். 28-**

கலிபோர்னியாவில் நடந்த கார் விபத்தில் கேரளாவை சேர்ந்த ஒரே குடும்பத்தினர் 4 பேர் பரிதாபமாக பலியானார்கள்.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் பகுதியை சேர்ந்தவர் தருண் ஜார்ஜ். இவர் ஐக்கிய அமெரிக்கா நாட்டின் கலிபோர்னியாவில் பணியாற்றி வருகிறார். அவர் அங்கேயே தனது மனைவி மற்றும் 2 குழந்தைகளுடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் தருண்ராஜ் தனது மனைவி மற்றும் மகன்களுடன் காரில் சென்றார். கலிபோர்னியாவில் பிளசன்டன் பகுதியில் ஸ்டோனிரிட்ஜ் டிரைவ் புட்ஹில் சாலையில் சென்று கொண்டிருந்த போது அவர்களது கார் விபத்தில் சிக்கியது. இதில் அவர்களது கார் முற்றிலுமாக நொறுங்கியது. காரின் இடிபாடுகளில் சிக்கி தருண் ஜார்ஜ், அவரது மனைவி மற்றும் 2 குழந்தைகள் ஆகிய 4 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். கார் முற்றிலுமாக நொறுங்கியிருப்பதால் அதிவேகமாக சென்றதே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று போலீசார் கருதுகின்றனர். அதனடிப்படையில் பிளசன்டன் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### குஜராத்தைச் சேர்ந்தவர்கள்: அமெரிக்காவில் விபத்தில் 3 இந்தியர்கள் உயிரிழப்பு

**வாஷிங்டன், ஏப். 28-**

அமெரிக்காவில் சொகுசு கார் விபத்துக்குள்ளானதில், குஜராத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு கரோலினாவின் கிரின்வில்லே கவுண்டி பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில், அதிவேகமாக சென்ற கார், திடீரென கட்டுப்பாட்டை இழந்து பாலத்தில் இருந்து விலகி சென்றது. அங்கிருந்து 20 அடி உயரத்திற்கு மேலே பறந்து எதிரே இருந்த மரத்தின் மீது மோதி நொறுங்கியது. இச்சம்பவத்தில் குஜராத்தின் ஆனந்த் மாவட்டத்தைச் சேர்ந்த ரேகா பென் படேல், சங்கீதா பென் படேல் மற்றும் மணிஷா பென் படேல் ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் மட்டும் படுகாயத்துடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அவரது உடல்நிலை ஆபத்தான நிலையில் உள்ளதாக டாக்டர்கள் கூறியுள்ளனர்.

### சென்னை பல்கலைக்குட்பட்ட

# கல்லூரிகளில் டேட்டா அறிவியல் படிப்பு அறிமுகப்படுத்த திட்டம்

**சென்னை, ஏப். 28-**

சென்னை பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 24 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் டேட்டா அறிவியல் படிப்பை அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வருகிற கல்வி ஆண்டில் இந்த புதிய பாடத்திட்டங்களை கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டேட்டா அறிவியலுடன் பி.எஸ்.சி. கணினி அறிவியலையும், ஏ.ஐ. உடன் பி.எஸ்.சி. கணினி அறிவியலையும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளன.

சில கல்லூரிகள் பி.பி.ஏ., பி.எஸ்.சி. உளவியல் பாடப்பிரிவுகளில் சேர்க்கையை அதிகரிக்க முடிவு செய்து உள்ளன. மகளிர் கிறிஸ்தவ கல்லூரியில் பி.எஸ்.சி. கணினி அறிவியலை டேட்டா அறிவியல் பாடத்துடன் தொடங்கவும் சமூக பணி முதுநிலை பாடப்பிரிவை புதிதாக தொடங்கவும் திட்டமிட்டு உள்ளது.

வருகிற கல்வியாண்டில் பி.காம் கார்பரேட் செகரட்டரிஷிப் படிப்பை தொடங்கவும் முடிவு செய்யப்பட்டு உள்ளதாக முதல்வர் வில்லியன் ஜாஸ்பர் தெரிவித்தார். ஸ்டெல்லா மேரி கல்லூரியில் எம்.எஸ்.சி. டேட்டா அறிவியல் பாடப் பிரிவும் எம்.ஏ. தகவல் தொடர்பு ஆங்கிலத்தில் உணவு பதப்படுத்துதல் இளங்கலை பட்டப்படிப்பையும் தொடங்க திட்டமிட்டுள்ளது.

டேட்டா அறிவியல் தொடர்பான படிப்புகளுக்கு மாணவர்களிடம் அதிக தேவை உள்ளது என்றும் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக்கு பிறகு பாடநெறி கிடைக்கும் என்றும் ஸ்டெல்லா மேரி கல்லூரி யின் முதல்வர் ஸ்டெல்லா மேரி கூறினார்.

இது குறித்து சென்னை கிறிஸ்தவ கல்லூரி முதல்வர் பால் வில்சன் கூறுகையில், வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களுக்கும் பொருள் அறிவியல் மற்றும் ஜியோ இன்பர்மேட்டிக்ஸ் பாடங்களை வழங்க திட்டமிட்டு இருக்கிறோம் என்றார்.

# ஈகுவடாரில் ராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கி 8 பேர் உயிரிழப்பு

**குவிட்டோ, ஏப். 28-**

ஈகுவடாரில் ராணுவ ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் 5 வீரர்கள் உட்பட 8 பேர் பலியானார்கள்.

ஈகுவேடார் நாட்டின் பாஸ்தஜா மாகாணத்தின் டிவினோ மாவட்டத்தில் வெள்ளம் எதிரொலியாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்நிலையில், அவர்களுக்கு வேண்டிய உணவு, மருந்து, போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்குவதற்காக ராணுவ ஹெலிகாப்டர் ஒன்று நேற்று முன்தினம் புறப்பட்டு சென்று உள்ளது.

அந்த ஹெலிகாப்டர் புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீரென விபத்திற்குள்ளானது. இந்த சம்பவத்தில், வீரர்கள் 5 பேர் மற்றும் பொதுமக்களில் 3 பேர் என மொத்தம் 8 பேர் உயிரிழந்து உள்ளனர். அவர்களின் உடல்களை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்கு கொண்டு சென்றனர்.

இந்த விபத்து பற்றி ஈகுவேடார் ராணுவம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், இந்த துரதிர்ஷ்டவச சம்பவம் ஏற்பட்டதற்கான காரணம் பற்றி விசாரிக்க குழு ஒன்று உடனடியாக அமைக்க உத்தரவிடப்பட்டு உள்ளது என தெரிவித்து உள்ளது.

**28-04-2024**




**மேஷம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். அன்னதானம் போன்ற நற் காரியங்களில் ஈடுபடுவீர்கள். நல்ல மனைவி அமைவாள். புனிதப் பயணங்களால் புண்ணியம் சேரும்.

**ரிஷபம்:-** மனைவி/கணவனின் மனம் அறிந்து செயல்பட்டால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். எந்தச் செயலையும் அவசரமின்றி நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம்.

**மிதுனம்:-** வாக்கு சாதுரியத்தால் வருமானம் பெருகும். அரசால் ஆதாயம் உண்டு. புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கடகம்:-** விரும்பிய காரியங்கள் விரும்பியபடி நடக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பயணம் சுகப்படும்.

**சிம்மம்:-** முனைப்புக் காட்ட முயற்சிகள் வெற்றி பெறும்.. தொழில் ஆர்வம் கூடினால் தான் ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். சிலருக்கு தேவையற்ற கவலைகள் எழும்.

**கன்னி:-** பெற்றோர்களின் மூலம் சகாயம் அடைவீர்கள். மண வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**துலாம்:-** வியாபாரத்தில் ஏற்பட்ட அதிக வருமானத்தால் பொருளாதாரம் மேம்படும். கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை. இனிய பேச்சால் பெண்களை கவர்வர்.

**விருச்சிகம்:-** இன்று, உணவு விஷயத்தில் கூட திருப்தி இருக்காது. மனதில் நிம்மதி அற்ற நிலை உருவாகும். கல்வியில் வெற்றி கிட்டாத நிலையில் மகிழ்ச்சி குறையும்.

**தனுசு:-** மணவாழ்க்கை மணக்கும். தனவரவு மனத்திருப்தி ஏற்படும். ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**மகரம்:-** இடமாற்றம் ஏற்படலாம். நஷ்டங்களை தவிர்க்க வியாபாரத்தில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எதிலும் ஆராய்ந்து செயல்களில் இறங்க வேண்டிய நாள்.

**கும்பம்:-** பெண்களால் தன லாபம் அடைவீர்கள். பிரிந்தவர் கூடிப் பேரின்பம் அடைவர். மாணவர்களுக்கு கல்வியில், வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**மீனம்:-** வியாபார விரிவாக்கத் திட்டங்கள் முன்னேற்றம் தரும். அதன் காரணமாக தன வரவு கூடும். எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும்.

# தருமபுரம் ஆதீனத்துக்கு மிரட்டல்: 2 பேரின் ஜாமின் மனு தள்ளுபடி

**மயிலாடுதுறை, ஏப். 28-**

தருமபுரம் ஆதீன போலி வீடியோ மிரட்டல் விவகாரத்தில் இருவரின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து மயிலாடுதுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மயிலாடுதுறை அருகே பழமை வாய்ந்த சைவ மடமான தருமபுரம் ஆதீன மடம் அமைந்துள்ளது. ஆதீனத்தின் 27-வது குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பொறுப்பு வகித்து வருகிறார். இந்நிலையில் இவரிடம் சிலர் பணம் கேட்டு தொடர்ந்து மிரட்டல் விடுத்த வழக்கில், 9 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், பாஜக மாவட்ட தலைவர் அகோரம், செம்பனார்கோயில் கலைமகள் கல்வி நிலைய தாளாளர் கொடியரசு மற்றும் வினோத், விக்னேஷ், ஸ்ரீநிவாஸ் ஆகிய 5 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு மயிலாடுதுறை கிளை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, இவர்களில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜாமீன் கேட்டு விண்ணப்பித்திருந்த அகோரம், கொடியரசு ஆகியோரின் ஜாமீன் மனு 2 நாட்களுக்கு முன்பு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்நிலையில், மயிலாடுதுறை நீதிமன்றத்தில் ஜாமீன் கேட்டு விண்ணப்பித்திருந்த சீர்காழி பாஜக முன்னாள் ஒன்றிய செயலாளர் விக்னேஷ், தஞ்சை வடக்கு மாவட்ட பாஜக பொதுச்செயலாளர் வினோத் ஆகியோரின் ஜாமீன் மனுவை மயிலாடுதுறை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

# அசாமில் காட்டு யானை தாக்கியதில் 3 பேர் பலி

**திஸ்பூர், ஏப். 28-**

அசாமில் காட்டு யானை தாக்கியதில் 2 வனத்துறை அலுவலர்கள் உட்பட 3 பேர் பலியானார்கள்.

அசாம் மாநிலம் சோனித்பூர் மாவட்டத்தில் உள்ள திராய் மஜூலி என்ற கிராமத்தில் வனத்துறை அதிகாரிகள் நேற்று காலை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அருகில் உள்ள தேக்கியாஜூலி வனப் பகுதியில் இருந்து ஒரு காட்டு யானை கிராமத்திற்குள் புகுந்தது.

அந்த யானையை வனப் பகுதிக்குள் விரட்டுவதற்காக அதிகாரிகள் முயற்சித்தனர். அப்போது யானை தாக்கியதில் வனத்துறை காவலர்கள் கோலேஸ்வர் போரோ, பீரன் ரவா மற்றும் உள்ளூர் நபர் ஜதின் தந்தி ஆகிய 3 பேர் உயிரிழந்தனர்.

மேலும் யானை தாக்கியதில் படுகாயமடைந்த மற்றொரு நபர் திபாகர் மலகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து யானையை வனப்பகுதிக்குள் விரட்டும் முயற்சி நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### வியட்நாம் சபாநாயகர் ராஜினாமா

**ஹனோய், ஏப். 28-**

வியட்நாமில் பாராளுமன்ற சபாநாயகர் ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததை தொடர்ந்து தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். வியட்நாமில் பாராளுமன்ற சபாநாயகராக வூங் டின் ஹியூ (67) இருந்து வருகிறார். இவர் மீது அதிகார துஷ்பிரயோகம், ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதற்கிடையே அவரது உதவியாளர் பாம் தாய் ஹா ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் தற்போது வூங் டின் ஹியூ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இது அங்குள்ள அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சட்டவிரோதமாக அழைத்து செல்லப்பட்ட குழந்தைகள் 95 பேர் அயோத்தியில் மீட்பு

**அயோத்தி, ஏப். 28-**

உத்தரபிரதேசம் மாநிலம் அயோத்தியில் குழந்தைகள் நல ஆணையம் அதிகாரிகள் பஸ்சில் சட்டவிரோதமாக அழைத்து செல்லப்பட்ட 95 குழந்தைகளை மீட்டனர்.

பீகாரில் இருந்து உத்தர பிரதேசத்திற்கு குழந்தைகள் கடத்தப்படுவதாக குழந்தைகள் நல ஆணையம் அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து உத்தரபிரதேசம் மாநிலம் அயோத்தியில் குழந்தைகள் நல ஆணையம் அதிகாரிகள் பஸ்சில் சட்டவிரோதமாக அழைத்து செல்லப்பட்ட 95 குழந்தைகளை மீட்டனர். குழந்தைகளை கடத்தி சென்று பணத்திற்கு விற்பனை செய்ய முயற்சி நடந்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அயோத்தி குழந்தைகள் நலக் குழுவின் தலைவர் சர்வேஷ் அவஸ்தி கூறியதாவது:

அயோத்தியில் நாங்கள் குழந்தைகளை மீட்டோம். அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவி வழங்கப்பட்டது. மீட்கப்பட்ட குழந்தைகள் 4-12 வயதுக்குட்பட்டவர்கள். குழந்தைகளை அழைத்து வந்தவர்களிடம் பெற்றோரிடம் இருந்து ஒப்புதல் கடிதம் இல்லை.

பெற்றோரை தொடர்பு கொண்டு குழந்தைகள் ஒப்படைக்கப்படும். பெற்றோரின் ஒப்புதலின்றி 95 குழந்தைகள் எதற்காக பஸ்சில் அழைத்து செல்லப்பட்டனர் என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

உத்தரப்பிரதேச குழந்தைகள் நல ஆணைய உறுப்பினர் சுசித்ரா சதுர்வேதியிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில், குழந்தைகள் கொண்டு செல்லப்படுவதை அறிந்து கொண்டதாக கூறினார்.

# ரூ.71 லட்சம் மதிப்பில் கடத்தல் தங்கம் திருச்சி விமான நிலையத்தில் பறிமுதல்

**திருச்சி, ஏப். 28-**

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில், துபாயில் இருந்து பயணி ஒருவர் நூதன முறையில் கடத்தி வந்த ரூ. 71 லட்சம் மதிப்புள்ள கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

திருச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு சிங்கப்பூர், மலேசியா, துபாய், சார்ஜா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக விமானங்கள் வந்து செல்கிறது.

அவ்வாறு விமானங்களில் பயணம் மேற்கொண்டு வரும் பயணிகள் நூதன முறையில் தங்கத்தை கடத்தி வருவது தொடர் கதையாக நிகழ்ந்து வருகிறது.

அந்த வகையில் துபாயிலிருந்து, திருச்சி விமான நிலையம் வந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான பயணிகளிடம் திருச்சி விமான நிலைய வான் நுண்ணறிவு சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

சோதனையின் போது ஆண் பயணி ஒருவர் தனது ஆசனவாயில் பேஸ்ட் வடிவில் 3 பாக்கெட்டுகளில் ரூ.70.58 லட்சம் மதிப்புள்ள 977 கிராம் தங்கத்தை மறைத்து வைத்து கடத்தியது தெரிய வந்தது. இதனையடுத்து தங்கத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள், அந்த பயணியிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### சர்.பிட்டி தியாகராயர் பிறந்த நாள்: அமைச்சர் உதயநிதி புகழாரம்

**சென்னை, ஏப். 28-**

ஒரு நூற்றாண்டுக்கு முன்பே திராவிட மாடல் அரசுக்கான அடித்தளம் அமைத்தவர் சர்.பிட்டி தியாகராயர் என்று அவரது பிறந்த நாளையொட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

சர்.பிட்டி தியாகராயரின் பிறந்த நாளையொட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தமிழகத்தின் அரசியல் போக்கை நிரந்தரமாக மாற்றியமைத்த வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் பிறந்தநாள். ஒரு நூற்றாண்டுக்கு முன்பே திராவிட மாடல் அரசுக்கான அடித்தளம் அமைத்தவர். கல்வியிலும், அரசு வேலைவாய்ப்பிலும் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் இடம்பெற வழிவகுத்த திராவிட இனத்தின் கம்பீரத் தலைவர்.

வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் சமூகநீதிப் பணிகளை என்றென்றும் நினைவுகூர்வோம். தியாகராயர் புகழ் ஓங்கட்டும். இவ்வாறு அந்த பதிவில் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## வாக்குப்பதிவு நாளில் சி.பி.ஐ. சோதனை:
# தேர்தல் ஆணையத்தில் திரிணாமுல் காங். புகார்

**கொல்கத்தா, ஏப். 28-**

தேர்தல் நாளில் சந்தேஷ்காலியில் சி.பி.ஐ. சோதனை நடத்தியதற்கு எதிராக மேற்கு வங்க தலைமை தேர்தல் அதிகாரிக்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கடிதம் எழுதியுள்ளது. இது குறித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

மக்களவைத் தேர்தலின் போது அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில், தேர்தல் நாளன்று, மேற்கு வங்க மாநிலம், சந்தேஷ்காலியில் உள்ள வெற்று இடத்தில், சி.பி.ஐ. நேர்மையற்ற சோதனையை நடத்தியுள்ளது.

பலமுறை பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட போதிலும், மத்திய புலனாய்வு அமைப்புகள் நாடு முழுவதும், குறிப்பாக தேர்தல் காலத்தில் சோதனை மேற்கொண்டு வருகிறது. அவற்றை தேர்தல் ஆணையம் கண்டும் காணாமல் உள்ளது.

2ம் கட்ட வாக்குப்பதிவான நேற்று முன்தினம், குறிப்பாக மேற்கு வங்கத்தில், டார்ஜிலிங், ராய்கஞ்ச் ஆகிய மூன்று பாராளுமன்ற தொகுதிகளில் வாக்காளர்கள் வாக்களிக்கத் திரண்டிருந்தனர். தேர்தல் நடந்து கொண்டிருந்தபோது, சந்தேஷ்காலியில் உள்ள ஒரு காலி இடத்தில் சி.பி.ஐ. வேண்டுமென்றே கண்ணியமற்ற சோதனையை நடத்தியது.

தேசிய பாதுகாப்புப் படையின் வெடிகுண்டு படை உள்ளிட்ட கூடுதல் படைகளை சி.பி.ஐ. வரவழைத்ததாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான சோதனையின் போது வீடொன்றில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சட்டம் ஒழுங்கு என்பது முற்றிலும் மாநில அரசின் வரம்பிற்கு உட்பட்டது என்றாலும், சி.பி.ஐ. அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன் மாநில அரசு பாதுகாப்பு/அல்லது காவல்துறை அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்கக்கூடிய அறிவிப்பை வெளியிட வேண்டும். ஆனால் வெளியிடவில்லை.

மேலும், மாநில காவல்துறையில் முழுமையாக செயல்படும் வெடிகுண்டு செயலிழக்கும் குழு உள்ளது. இது போன்ற சோதனையின் போது வெடிகுண்டு படை தேவை என்று சி.பி.ஐ. கூறியிருந்தால், முழு நடவடிக்கைக்கும் உதவியிருக்க முடியும்.

இருப்பினும், அத்தகைய உதவி எதுவும் கோரப்படவில்லை. அரசு நிர்வாகம் அந்த இடத்திற்கு வருவதற்கு முன்பே இது போன்ற சோதனையின்போது ஊடகவியலாளர்கள் உடனிருந்தனர் என்பது மேலும் ஆச்சரியமாக உள்ளது. இந்த நேரத்தில், சோதனையின் போது ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக ஏற்கனவே நாடு முழுவதும் செய்தியாக இருந்தது.

இந்த ஆயுதங்கள் உண்மையில் தேடுதல் மற்றும் பறிமுதல் நடவடிக்கையின் போது மீட்கப்பட்டதா அல்லது சி.பி.ஐ. மற்றும் என்.எஸ்.ஜி.யால் ரகசியமாக புதைக்கப்பட்டதா என்பதை உறுதியாக அறிய வழி இல்லை. மேற்குறிப்பிட்ட சம்பவங்களின் முழு வரம்பும், சி.பி.ஐ. வேண்டுமென்றே ஊடகங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்ததைக் குறிக்கிறது.

இதனால் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் அதன் வேட்பாளர்களுக்கு எதிராக நாடு முழுவதும் அவமதிப்பு உள்ளது. அதனால், தேர்தல் காலத்தில் சி.பி.ஐ. உட்பட எந்த ஒரு மத்திய புலனாய்வு நிறுவனத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் செயல்பாட்டாளர்கள் மீது நடவடிக்கை எடுக்காத வகையில் உடனடி வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டமைப்பை வெளியிட வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கெஜ்ரிவால் கைதை கண்டித்து ஆம் ஆத்மியினர் போராட்டம்

**புதுடெல்லி, ஏப். 28-**

டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கைதை கண்டித்து கிழக்கு டெல்லியில் உள்ள லட்சுமி நகரில் ஆம் ஆத்மி கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

டெல்லி மாநில முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், மதுபான கொள்கை தொடர்பான பணமோசடி வழக்கில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற காவல் மே 7ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பாராளுமன்ற தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கெஜ்ரிவாலின் மனைவி சுனிதாகெஜ்ரிவால் டெல்லி, பஞ்சாப், குஜராத் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்களில் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். அதன்படி சுனிதா கெஜ்ரிவால் நேற்று கிழக்கு டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி சார்பில் போட்டியிடும் குல்தீப் குமாரை ஆதரித்து ரோடு ஷோ நடத்தினார்.

இந்நிலையில், கிழக்கு டெல்லியில் உள்ள லட்சுமி நகரில் அரவிந்த் கெஜ்ரிவாலின் கைதை கண்டித்து ஆம் ஆத்மி கட்சியினர் போராட்டம் நடத்தினர். குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டதில் ஆம் ஆத்மி கட்சியினர் பதாகைகளை ஏந்தியபடி ''கைதுக்கு பதிலடி மக்களின் ஓட்டு தான்'' என்ற முழக்கத்தை எழுப்பினர்.மேலும் பா.ஜ.க.வின் சர்வாதிகாரம் மற்றும் கெஜ்ரிவாலின் கைதுக்கு தகுந்த பதிலடி கொடுக்க டெல்லி மக்கள் தயாராக உள்ளனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி காங்கிரஸ் உடன் கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கிறது. மொத்தம் உள்ள 7 தொகுதிகளில் கிழக்கு டெல்லி, மேற்கு டெல்லி, தெற்கு டெல்லி, புது டெல்லி ஆகிய இடங்களில் ஆம் ஆத்மி கட்சி போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## காலை உணவுத்திட்டத்தின் முன்னோடி:
# சர் பிட்டி தியாகராயருக்கு முதல்வர் ஸ்டாலின் புகழாரம்

**சென்னை,ஏப். 28-**

காலை உணவு திட்டத்தின் முன்னோடி சர் பிட்டி தியாகராயர் என்று அவரது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் புகழாரம் சூட்டி உள்ளார்.

நீதிக்கட்சியின் தந்தை சர் பிட்டி தியாகராயர் பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

பார்ப்பனரல்லாதார் கொள்கைப் பிரகடனம் வெளியிட்டு திராவிட இனத்தின் உரிமைக் குரலை ஓங்கி ஒலித்த தீரர். அப்பழுக்கற்ற அரசியல் வாழ்வினால் சென்னையின் கல்வி, மருத்துவ வளர்ச்சிக்குத் தூணாக விளங்கிய மக்கள் தொண்டர்.

காலை உணவுத் திட்டத்தின் முன்னோடி. தேடி வந்த பதவியை மறுத்த மாண்பாளர் - நம் வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் பிறந்தநாளில் அவரது வாழ்வையும் பணியையும் போற்றி வணங்குகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்து உள்ளார். முன்னதாக தமிழ்நாடு அரசின் சார்பில், ‘வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயரின் 173-வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் இன்று சித்திரை தேர்திருவிழா தொடங்குகிறது
## வரும் 6-ம் தேதி தேரோட்டம்

**திருச்சி, ஏப். 28-**

திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் சித்திரை தேர்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. வரும் 6-ம் தேதி திருத்தேரோட்டம் நடக்கிறது.

திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் சித்திரை தேர்திருவிழா ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடப்படும். இந்த ஆண்டுக்கான விழா இன்று (ஞாயிற்றுக்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதையொட்டி நேற்று முன்தினம்தேரில் முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சி நடந்தது. முன்னதாக கோவில் அர்ச்சகர்கள் வேதங்கள் முழங்க முகூர்த்தக்காலில் புனிதநீர் தெளித்து, சந்தனம் பூசி, முகூர்த்தக்காலின் நுனியில் மாவிலை, பூமாலை உள்ளிட்ட மங்கல பொருட்கள் அணிவிக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது.

அதன் பின்னர் மதியம் 12.30 மணியளவில் கடக லக்னத்தில் முகூர்த்தக்காலை தேரில் கோவில் இணை ஆணையர் மாரியப்பன், கோவில் உள்துறை கண்காணிப்பாளர் வேல்முருகன், அர்ச்சகர் சுந்தர் பட்டர் மற்றும் அர்ச்சகர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் நட்டனர்.

அப்போது கோவில் யானைகள் ஆண்டாள், லட்சுமி தும்பிக்கையை உயர்த்தி மரியாதை செலுத்தின. தொடர்ந்து இன்று அதிகாலை 3.30 மணிக்கு நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு அதிகாலை 3.45 மணிக்கு கொடிமர மண்டபம் வருகிறார். காலை 5.30 மணி முதல் காலை 6.15 மணிக்குள் மேஷ லக்னத்தில் கொடியேற்றம் நடைபெறுகிறது.

காலை 7.30 மணிக்கு நம்பெருமாள் கொடிமர மண்டபத்தில் இருந்து புறப்பட்டு காலை 7.45 மணிக்கு கண்ணாடி அறையை சென்றடைகிறார். மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை பேரி தாடனம் நடைபெறுகிறது. மாலை 6.30 மணிக்கு நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் புறப்பட்டு சித்திரை வீதிகளில் உலா வந்து இரவு 8.30 மணிக்கு சந்தனு மண்டபம் வந்தடைகிறார். அங்கிருந்து புறப்பட்டு இரவு 9 மணிக்கு யாக சாலையை சென்றடைகிறார்.

அங்கு நம்பெருமாள் திருமஞ்சனம் கண்டருளுகிறார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நாளை (29-ம் தேதி) அதிகாலை 2 மணிக்கு கண்ணாடி அறையை சென்றடைகிறார். தொடர்ந்து மாலை கற்பகவிருட்ச வாகனத்திலும், 30-ம் தேதி காலை சிம்ம வாகனத்திலும், மாலை யாளி வாகனத்திலும் 1-ம் தேதி காலை இரட்டை பிரபை வாகனத்திலும். மாலை கருடவாகனத்திலும், 2-ம் தேதி காலை சேஷ வாகனத்திலும், மாலை அனுமந்த வாகனத்திலும், 3-ம் தேதி காலை தங்க ஹம்ச வாகனத்திலும், மாலை யானை வாகனத்திலும் நம்பெருமாள் எழுந்தருளி சித்திரை வீதிகளில் உலா வருகிறார்.

தொடர்ந்து 4-ம் தேதி நெல்லளவு கண்டருளுகிறார். 5-ம் தேதி காலை வெள்ளி குதிரை வாகனத்திலும், மாலை தங்ககுதிரை வாகனத்திலும் வீதி உலா வருகிறார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சித்திரை தேரோட்டம் வருகிற 6-ம் தேதி நடைபெறுகிறது. 7-ம் தேதி சப்தா வரணம் நடைபெறுகிறது. விழாவின் நிறைவு நாளான 8-ம் தேதி நம் பெருமாள் ஆளும்பல்லக்கில் எழுந்தருளி வீதி உலா வருகிறார்.

# அரசியலமைப்பு, ஜனநாயகத்தை பாதுகாப்பதே எங்கள் நோக்கம்
## மல்லிகார்ஜூன கார்கே பேட்டி

**திஸ்பூர், ஏப். 28-**

நாட்டின் அரசியலமைப்பையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பதே எங்கள் நோக்கம் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே கூறினார். அசாமின் திஸ்பூரில் நிருபர்களிடம் கார்கே கூறியதாவது: பிரதமர் மோடி அளித்த வாக்குறுதிகளில், ஒன்று கூட நிறைவேற்றவில்லை. இருந்தபோதிலும், பிரதமர் மோடி நாட்டிற்கு நிறைய செய்துள்ளார் என பா.ஜ., வினர் கூறுகிறார்கள். சுதந்திர போராட்டத்தில் காங்கிரசார் ஒரு பகுதியாக இருந்தனர். பா.ஜ.,வினர் யாரும் நாட்டின் சுதந்திரத்துக்காக போராடவில்லை. காங்கிரசை சேர்ந்த மறைந்த தலைவர்களை கூட விமர்சிக்கிறார்கள். இந்திரா, சோனியா மற்றும் ராகுலையும் விமர்சிக்கிறார்கள். நாட்டின் அரசியலமைப்பையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதே எங்கள் நோக்கம். காங்கிரஸ் ஓடும் நதி போன்றது, சிலர் கட்சியை விட்டு வெளியேறுவதால், பாதிப்பும் இல்லை. இவ்வாறு கூறினார்.

## அடுத்த கல்வி ஆண்டு முதல்
# சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் ஆண்டுக்கு 2 பொதுத்தேர்வுகள்

**புதுடெல்லி, ஏப். 28-**

அடுத்த கல்வி ஆண்டு முதல் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் ஆண்டுக்கு இரண்டு பொதுத்தேர்வுகள் நடத்துவதற்கான செயல்முறையை தொடங்கும்படி மத்திய கல்வி அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. மேலும் செமஸ்டர் திட்டத்தை அறிமுகப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் பயிலும் 10 மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு தேர்வுகள் நடத்தப்படும் என்று மத்திய அரசு ஏற்கனவே அறிவித்து இருந்தது. இந்நிலையில் மத்திய கல்வி அமைச்சகமானது, அடுத்த கல்வி ஆண்டு முதல், ஆண்டுக்கு இரண்டு பொதுத் தேர்வுகளை நடத்துவதற்கு சி.பி. எஸ்.இ. தயாராகும்படி அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் 2025-26ம் கல்வி ஆண்டு முதல் ஆண்டுக்கு இரண்டு பொது தேர்வுகளை எவ்வாறு நடத்துவது என்பதற்கான செயல்முறைகளை உருவாக்கும்படி மத்திய இடைநிலை கல்வி வாரியத்திடம் அறிவுறுத்தி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கிறது.

இது தொடர்பாக அடுத்த மாதம் சி.பி.எஸ்.இ. மற்றும் மத்திய கல்வி அமைச்சகம் பள்ளி முதல்வர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும் செமஸ்டர் திட்டத்தை அறிமுகப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழகத்தில் இயல்பைவிட 83 சதவீதம் மழை குறைவு

**சென்னை, ஏப். 28-**

தமிழகத்தில் கோடைக்கால பருவமழை இயல்பைவிட 83 சதவீதம் குறைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பல மாவட்டங்களில் வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஒரு சில மாவட்டங்களில் வெப்பச்சலனம் காரணமாக மிதமான மழையும் பெய்துள்ளது.அதன்படி, கடந்த மார்ச் 01-ம் தேதி முதல் ஏப்ரல் 26 வரையிலான காலகட்டத்தில் அரியலூரில் 1.9 மி.மீ மழையும், திண்டுக்கல்லில் 12.7 மி.மீ, ஈரோட்டில் 4.5 ஆகவும், கன்னியாகுமரியில் 55.5 ஆகவும், காரைக்காலில் 2.0 ஆகவும், மதுரையில் 16.8 ஆகவும், நாகப்பட்டினத்தில் 17.0 ஆகவும், அதிகபட்சமாக நீலகிரியில் 30.7 மி.மீட்டரும், நெல்லையில் 69.7 ஆகவும் தமிழகம் மற்றும் புதுவையில் 9.4 மி.மீ மழைப் பதிவாகியுள்ளது.

பொதுவாக கோடைக்கால பருவமழை இயல்பான அளவு 53.3 மி.மீ பதிவாக வேண்டிய நிலையில் 9.4 மி.மீ அளவிலான மழையே பதிவாகியுள்ளது. இது இயல்பிலிருந்து 83 சதவீத மழை குறைவாகப் பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## மணிப்பூரில் மீண்டும் பதற்றம்:
# இரண்டு குழுக்கள் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் ஒருவர் பலி

**இம்பால், ஏப். 28-**

மணிப்பூரில் 2 குழுக்கள் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் இளைஞர் பலியான சம்பவத்தில், வன்முறை பரவி விடாமல் தடுப்பதற்காக போலீசார் அதிக அளவில் குவிக்கப்பட்டு உள்ளனர்.

மணிப்பூரின் காங்கோபி மற்றும் இம்பால் கிழக்கு மாவட்டங்களின் எல்லை பகுதியில் சினம் கோம் பகுதியில் இரு குழுவினர் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. இந்த சம்பவத்தில், கிராமத்தில் தன்னார்வலராக செயல்பட்டு வந்த நபர் ஒருவர் காணாமல் போனார். அவரை பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், நேற்று காலை அவருடைய உடல் கண்டெடுக்கப்பட்டது. உயிரிழந்த அவர் லைஷ்ராம் பிரேம் என அடையாளம் காணப்பட்டு உள்ளது.இதனை தொடர்ந்து, அந்த பகுதியில் வன்முறை பரவி விடாமல் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்புக்காக போலீசார் அதிக அளவில் குவிக்கப்பட்டு உள்ளனர்.

மணிப்பூரில் கடந்த ஆண்டு மே மாதத்தில், குகி பழங்குடியினருக்கும், மெய்தி சமூகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலால் வன்முறை பரவியது. அப்போது, பள்ளிகள், வீடுகள் என கட்டிடங்கள் பல சூறையாடப்பட்டன. வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டன. இந்த சம்பவத்தில் ஆண்கள், பெண்கள் என பலர் பாதிக்கப்பட்டனர். ஆண்களில் சிலர் கடத்தி செல்லப்பட்டு கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் எதிரொலித்தது. இதனை தொடர்ந்து, அந்த பகுதியில் கூடுதல் ராணுவ படைகள் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்த சம்பவம் நடந்து ஓராண்டு நிறைவு பெற உள்ள சூழலில், மற்றொரு அதிர்ச்சியான சம்பவம் நடந்தது. நாடு முழுவதும் 2-வது கட்ட மக்களவை தேர்தல் நேற்று முன்தினம் அமைதியாக நடந்து முடிந்தது. தேர்தல் ஆணையத்தின் செயலியின்படி, 2-வது கட்ட மக்களவை தேர்தலில் மணிப்பூரில் 78.78 சதவீதம் வாக்குகள் பதிவாகி உள்ளன என தகவல் தெரிவிக்கின்றது.

இந்த சூழலில், மணிப்பூரின் பிஷ்ணுப்பூர் மாவட்டத்தில் நரண்சேனா பகுதியில் 128-வது பட்டாலியனை சேர்ந்த சி.ஆர். பி.எப். வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது, குகி பயங்கரவாதிகள் அவர்களை நோக்கி திடீர் தாக்குதல் நடத்தினர்.

இந்த பயங்கரவாத தாக்குதலில் சி.ஆர்.பி.எப். வீரர்கள் 2 பேர் உயிரிழந்து உள்ளனர். 4 துணை ராணுவ படை வீரர்கள் காயம் அடைந்தனர். இந்நிலையில், இரு குழுக்கள் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தது அந்த பகுதியில் பதற்ற நிலையை ஏற்படுத்தி உள்ளது.

# மத்திய அரசின் நிதி பகிர்வு சீராக இருக்க வேண்டும்
## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேட்டி

**சென்னை, ஏப். 28-**

மத்திய அரசின் நிதி பகிர்வு சீராக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் ஜெயகுமார், தமிழகத்தை மத்திய அரசு ஓரவஞ்சனையுடன் பார்க்கிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

மிக்ஜாம் புயல், வெள்ள பாதிப்புகளுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக்ஜாம் புயல் நிவாரண நிதியாக ரூ. 285 கோடியும், வெள்ள பாதிப்புகளுக்கு நிவாரண நிதியாக ரூ.397 கோடியும் வழங்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

முதல் கட்டமாக ரூ. 285 கோடி மிக்ஜாம் புயல் நிதியில் இருந்து ரூ. 115.45 கோடியும், ரூ. 397 கோடி வெள்ள பாதிப்பு நிதியில் இருந்து ரூ. 160.61 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் யானைப் பசிக்கு சோளப் பொறி என்பது போல மத்திய அரசு தமிழகத்திற்கு நிவாரண நிதியை ஒதுக்கியுள்ளது என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

சென்னையில் நிருபர்களுக்கு பேட்டியளித்த அவர் கூறியதாவது, தேசியக் கட்சிகளால் தமிழகத்திற்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. மத்தியில் தேசிய கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க. என யார் ஆட்சியில் இருந்தாலும், தமிழகத்திற்கு நிதி தருவதில்லை. வடக்கிற்கு ஒரு நீதி, தெற்கிற்கு ஒரு நீதி என்பதை ஏற்க முடியாது. மத்திய அரசு குறைவாக நிதி அளித்துள்ளது. யானைப் பசிக்கு சோளப்பொறி என்பது போல மத்திய அரசு தமிழகத்திற்கு நிவாரண நிதியை ஒதுக்கியுள்ளது. தமிழகத்தை மத்திய அரசு ஓரவஞ்சனையுடன் பார்க்கிறது. நிதி பகிர்வு சீராக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தல்:
# 88 தொகுதிகளில் சராசரியாக 61 சதவீதம் வாக்குகள் பதிவு
## திரிபுராவில் வாக்குப்பதிவு அதிகம்

**புதுடெல்லி, ஏப். 28-**

பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தலில், நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த, 88 தொகுதிகளில் சராசரியாக 61 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன. திரிபுரா அதிகபட்ச வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதுமுள்ள 543 மக்களவை தொகுதிகளுக்கு, மொத்தம் 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அதன்படி, முதற்கட்டமாக கடந்த 19ம் தேதி தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. அதைதொடர்ந்து நேற்று 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த, 88 தொகுதிகளில் இரண்டாம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. அதில் ஒட்டுமொத்தமாக சுமார் 60.96 சதவிகிதம் அளவிற்கு வாக்குகள் பதிவாகியுள்ளன.

கேரளாவில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பழுதானதால் வாக்குப்பதிவு தாமதமானது. மறுபுறம் பாஜக கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று, பொதுமக்கள் நிர்பந்திக்கப்பட்டதால் மணிப்பூரில் மறுவாக்குப்பதிவு நடத்த காங்கிரஸ் கோரிக்கை வைத்துள்ளது. இதனிடையே, இந்திய தேர்தல் ஆணையம் தனது வாக்குப்பதிவு செயலியில் வெளியிட்ட தோராயமான புள்ளிவிவரங்களின்படி, மாநில வாரியான வாக்குப்பதிவின் அடிப்படையில், திரிபுரா அதிகபட்ச வாக்குப்பதிவை பெற்றுள்ளது. மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் மிகக் குறைந்த வாக்குகளே பதிவாகியுள்ளன.

ராஜஸ்தானில் 13 மக்களவைத் தொகுதிகள், ஜம்மு காஷ்மீரில் ஜம்மு தொகுதி, உத்தரப் பிரதேசத்தில் எட்டு இடங்கள், திரிபுரா கிழக்கு மக்களவைத் தொகுதி, அவுட்டர் மணிப்பூர் பாராளுமன்றத் தொகுதியின் ஒரு பகுதி, அசாமில் 5 இடங்கள், மேற்கு வங்கத்தில் 3 இடங்கள் மற்றும் பீகாரில் ஐந்து தொகுதிகளில் நேற்று முன்தினம் வாக்குப்பதிவு நடைபெற்றது.

ராகுல் காந்தி, சசி தரூர், கஜேந்திர சிங் ஷெகாவத், கைலாஷ் சவுத்ரி, மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் 88 இரண்டாம் கட்ட வாக்குப்பதிவின் முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

தேர்தல் ஆணையத்தின் தோராயமான புள்ளிவிவரங்களின்படி, கேரளாவில் ராகுல் காந்தி போட்டியிட்ட தொகுதியான வயநாட்டில் 69.51 சதவீத வாக்குகளும், சசி தரூர் மற்றும் ராஜீவ் சந்திரசேகர் போட்டியிட்ட திருவனந்தபுரத்தில் 63.86 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

# ஹெலிகாப்டரில் ஏறும் போது தடுமாறி விழுந்த மம்தா

**கொல்கத்தா, ஏப். 28-**

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று ஹெலிகாப்டரில் ஏறும் போது தடுமாறி கீழே விழுந்தார். உடல்நிலையை கவனமாக பார்த்து கொள்ளுமாறு மம்தாவுக்கு டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த மாதம் கொல்கத்தாவின் காளிகாட் பகுதியில் உள்ள தன் வீட்டில், மம்தா பானர்ஜி தடுமாறி கீழே விழுந்தார். இதில், அவர் படுகாயம் அடைந்து மயங்கினார். மருத்துவமனையில் மம்தாவுக்கு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. நெற்றியில் காயம் ஏற்பட்ட புகைப்படத்தை சமூகவலைதளத்தில் மம்தா வெளியிட்டார். தற்போது அவர் குணமடைந்து, தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். வாக்காளர்களுக்கு டீ போட்டு கொடுத்து, நடனமாடி மம்தா ஓட்டு சேகரித்தார்.

இந்நிலையில், நேற்று துர்காபூரில் ஹெலிகாப்டரில் ஏறிய பின் இருக்கையில் அமரும் போது மம்தா தடுமாறி கீழே விழுந்தார். இதில் மம்தாவுக்கு லேசான காயம் ஏற்பட்டது. உடனடியாக அவரது பாதுகாப்புப் பணியாளர்கள் முதலுதவி அளித்தனர். இவர் அடிக்கடி கீழே விழுந்து காயம் அடைவது வழக்கமானதாக ஆகி விட்டது. கடந்த 2021-ம் ஆண்டும் சட்டசபை தேர்தலின் போது, அவரின் காலில் படுகாயம் ஏற்பட்டது. சில நாட்களாக அவர் வீல் சேரில் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். உடல்நிலையை கவனமாக பார்த்து கொள்ளுமாறு மம்தாவுக்கு டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

பின்னர், அவர் தனது திட்டமிடப்பட்ட பயணத்தைத் தொடர்ந்தார். மம்தா பானர்ஜி ஹெலிகாப்டரில் ஏறும் போது தடுமாறி கீழே விழும் வீடியோ காட்சிகள் வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஒட்டுமொத்த உலகிற்கும் உணவளிக்கும் கடவுள்களான உழவர்களை மதிக்காத எந்த அரசும் நீடித்தது இல்லை. அதற்கு உலகில் ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. தமிழ்நாட்டில் உழவர்களை மதிக்காத, அவர்களை பழிவாங்கும் தி.மு.க. அரசு தமிழ்நாட்டு மக்களால் வீழ்த்தப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.

- அன்புமணி



10 ஆண்டுகளில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் எந்தப் பணியையும் பா.ஜ.க. அரசு செய்யவில்லை. இதனால் நாட்டில் நிலவி வரும் அநீதியும் ஒடுக்குமுறையும், மக்களின் வாழ்க்கையை கடும் சிரமத்திற்குள்ளாக்கியுள்ளது. இந்த நிலையில், அநீதியையும், சர்வாதிகாரத்தையும் வேரோடு களைய காங்கிரஸ் நிச்சயம் ஆட்சிக்கு வரும்.

- பிரியங்கா காந்தி



போதைப் பொருட்களுக்கு அடிமையாகி தங்களின் எதிர்காலத்தை இழந்து வரும் இளைஞர்களை பாதுகாக்கும் வகையில், போதைப் பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் அவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கி போதையில்லா தமிழ்நாட்டை உருவாக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

- டி.டி.வி. தினகரன்



மோடி அரசு போய்விட்டது. சில நாட்களாக இது பா.ஜ.க. சர்க்காராக இருந்தது. தற்போது அது என்.டி.ஏ. சர்க்காராக இருக்கிறது. ஏப்ரல் 5 முதல் ஏப்ரல் 19 வரை காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை மோடி நிராகரித்து வந்தார். ஆனால். ஏப்ரல் 19-ம் தேதி தேர்தலின் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கு பின்னர், காங்கிரஸ் தேர்தல் அறிக்கை புதிய உயரத்தை எட்டியுள்ளது.

- ப.சிதம்பரம்

# திண்டுக்கல்லில் பல்வேறு இடங்களில் கோடைகால நீர்மோர் பந்தல் திறப்பு

## முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் திறந்து வைத்தார்



**திண்டுக்கல், ஏப். 28-**

திண்டுக்கல் மாநகரில் கோடை வெயிலை தவிர்க்கும் வண்ணம் விதமாக பல்வேறு இடங்களில் நீர் மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் திண்டுக்கல் நகரில் பல்வேறு இடங்களில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. அமைப்பு செயலாளர் வி.மருதராஜ், மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி.பி.பரமசிவம், மாநகராட்சி எதிர்க் கட்சி தலைவர் சி.எஸ். ராஜ மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திண்டுக்கல் மாநகர் வடக்கு பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் சுப்பிரமணி ஏற்பாட்டின் பேரில் காட்டாஸ் பத்திரி அருகே அமைக்கப்பட்டிருந்த நீர் மோர் பந்தல், கிழக்கு பகுதி செயலாளர் மோகன் ஏற்பாட்டின் பேரில் ஒய்.எம்.ஆர்.பட்டி பகுதி, தெற்கு பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் முரளிதரன் ஏற்பாட்டின் பேரில் நாகல் நகர் விநாயகர் கோவில் அருகே, மேற்கு பகுதி செயலாளர் சேசு ஏற்பாட்டின் பேரில் பேகம்பூர் பஸ் நிறுத்தம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த நீர் மோர் பந்தலை கழக பொருளாளர் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், சர்பத், இளநீர், தர்பூசணி, பப்பாளி, அன்னாசி, வாழைப்பழம், திராட்சை, கொய்யா மற்றும் குளிர்பானங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் இராஜசேகரன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் சிவபாரதி, மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ரவிக்குமார், மாவட்ட தொழிற்சங்க செயலாளர் ஜெயராமன், மாவட்ட ஓட்டுனர் அணி செயலாளர் பிரபுராம், மாவட்ட அம்மா பேரவை துணைத் தலைவர் நவநீதன், மின் பகிர்மான வட்ட செயலாளர் பாலாஜி, முன்னாள் அரசு வழக்கறிஞர் பழனிச்சாமி, முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நத்தம் பகுதிகளில் கோடைக்கால நீர், மோர் பந்தல்: முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநான் திறந்து வைத்தார்



**நத்தம், ஏப். 28-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ் நிலையரவுண்டானா முன்பு அதிமுக சார்பில் கோடைகால நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடந்தது. இதற்கு மாநில அம்மா பேரவை இணை செயலாளரும், நத்தம் ஒன்றியக்குழு தலைவருமான கண்ணன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ராமராசு, சின்னு, மணிகண்டன், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் ஜெயபாலன், மாவட்ட மாணவரணி இணை செயலாளர் அசாருதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் முன்னாள் அமைச்சரும், நத்தம் சட்டமன்ற உறுப்பினருமாகிய நத்தம் விசுவநாதன் கலந்து கொண்டு நீர்மோர் பந்தலை திறந்து வைத்தார். பின்னர் நீர் மோர், சர்பத், தர்பூசணி, பப்பாளி, உள்ளிட்ட பழங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.இதில் மாவட்ட கவுன்சிலர்கள் சின்னாக்கவுண்டர், பார்வதி, அவைத்தலைவர்கள் பிறவிக்கவுண்டர், சேக் ஒலி உள்ளிட்ட ஒன்றிய, பேரூராட்சி கவுன்சிலர்கள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மேலூர் நகர் அ.தி.மு.க. சார்பில் நீர்மோர் பந்தல்: ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



**மேலூர், ஏப். 28-**

மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் நகர் அ.தி.மு.க. சார்பில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில் மேலூர் பஸ் நிலையம் முன்பு நீர் மோர் பந்தலை மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி.ராஜன் செல்லப்பா, மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளரும், மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம் ஆகியோர் பொதுமக்களுக்கு வெள்ளரிக்காய், திராட்சை, தர்பூசணி, இளநீர், சர்பத், நீர்மோரினை வழங்கினர். நிகழ்ச்சியில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ராஜேந்திரன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் வழக்கறிஞர் ரமேஷ், மேலூர் நகர் கழகச் செயலாளர் எஸ்.எம்.சரவணகுமார், மேலூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பொன்ராஜேந்திரன், கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் குலோத்துங்கன், திருப்பரங்குன்றம் ஒன்றிய செயலாளர் நிலையூர் முருகன், மேலூர் முன்னாள் நகர் மன்ற தலைவர் எம்.ஓ. சாகுல் ஹமீது, தகவல் தொழில்நுட்ப பிரிவு மாநில துணைத் தலைவர் கௌரி சங்கர், நகர் கழக நிர்வாகிகள் இணைச் செயலாளர் ரேணுகா, துணை செயலாளர் பாண்டிலட்சுமி, மாவட்ட பிரதிநிதிகள் அறிவழகன், திருப்பதி, ஆணையூர் பகுதி கழக செயலாளர் கோபி, மாவட்ட எம்ஜி.ஆர் மன்ற துணை செயலாளர்கள் பெரியகருப்பன் என்ற அய்யங்காளை, நாகசுப்பிரமணியன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் தவபாண்டி, மாவட்ட மாணவரணி துணை தலைவர் மின்னல் மணி, மாவட்ட விவசாய பிரிவு இணைச் செயலாளர் வெள்ளரிப்பட்டி பிரபு, நகர் எம்.ஜி.ஆர் மன்றசெயலாளர் நாகேந்திரன், துணை செயலாளர் ஆணை சேவுகன், நகர் மகளிரணி செயலாளர் விஜயா அர்ச்சுணன், நகர் இலக்கிய அணி செயலாளர் மோகனசுந்தரம், நகர் இளைஞர் பாசறை செயலாளர் வெங்கடேசன், நகர் ஐடிவிங் செயலாளர் பிரபாகரன், நகர் அண்ணா தொழிற்சங்க துணை செயலாளர் முத்துகுமார், நகர் அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் கார்த்தி, நகர் இலக்கிய அணி துணை செயலாளர் மணிகண்டன், மலம்பட்டி முத்து, பகதூர், நளன், செந்தில், சக்கரவர்த்தி, சாலமன், வட்ட கழக செயலாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# திருப்பாலைக்குடியில் தண்ணீர் தேடி ஊருக்குள் வந்த புள்ளிமான்



**ராமநாதபுரம்,ஏப்.28-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது. மனிதர்களே தங்களின் உடல் வறட்சியை போக்க நீர்ச்சத்து நிறைந்த உணவுகளை வாங்கி சாப்பிட்டுவருகின்றனர். இந்த சூழ்நிலையில் விலங்குகள் தண்ணீர் கிடைக்காமல் தவித்து வருகின்றன. குறிப்பாக வனப்பகுதிகளில் வசிக்கும் வன விலங்குகள் தண்ணீர் தேடி அலைந்து திரிந்து மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வந்த வண்ணம் உள்ளன. இவ்வாறு நேற்றுகாலை ராமநாதபுரம் மாவட்டம் திருப்பாலைக்குடி பகுதிகளில் வறட்சியின் காரணமாக கண்மாய், குளம்,குட்டைகளில் தண்ணீர் வற்றி வருவதால் குடிப்பதற்காக தண்ணீர் தேடி 11 வயது உள்ள ஒரு புள்ளிமான் ஒன்று திருப்பாலைக்குடி கடற்கரைக்கு வந்தது, இந்த மான் அங்கும் இங்கும் பரிதவித்து திரிந்ததை கண்ட சமூக ஆர்வலர் பஸருல் ஹக் மற்றும் நண்பர்கள் மானை பத்திரமாக மீட்டு வனத்துறை அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.தண்ணீர் தேடி ஊருக்குள் வந்த மானை சிறுவர்களும் பொதுமக்களும் ஆர்வமாக பார்த்து சென்றனர்

# செம்பட்டி அருகே சாலை விபத்தில் இரண்டு பேர் பலி

**வத்தலகுண்டு, ஏப். 28-**

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகே போடிகாமன் வாடி கிராமத்தைச் சேர்ந்த, அரசு பள்ளி மாணவர் விடுதி சமையலர் உட்பட இரண்டு பேர், சாலை விபத்தில் சம்பவ இடத்தில் பலியானார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி அருகே போடிகாமன் வாடி கிராமத்தை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் (47) இவர், வத்தலகுண்டு அடுத்த, விருவீடு அரசு மாணவர் விடுதியில் சமையலராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில், தற்போது இவரது உறவினர் செம்பட்டி அருகே வீரக்கல் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி (47) ஆகிய இருவரும் இரு சக்கர வாகனத்தில், வத்தலகுண்டு சாலை வழியாக போடிகாமன்வாடி சென்று கொண்டிருந்தனர். அப்போது, திண்டுக்கலில் இருந்து வத்தலகுண்டு நோக்கிச் சென்ற, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கார் அவர்கள் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட போது, வத்தலகுண்டுவில் இருந்து திண்டுக்கல் நோக்கி சென்ற கார் அவர்கள் மீது பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் சம்பவ இடத்தில் ராமகிருஷ்ணன் மற்றும் அவரது உறவினர் சுப்பிரமணி ஆகிய இருவரும் பலியானார்கள். இதுகுறித்து, செம்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து, அவர்கள் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருமங்கலத்தில் குப்பை தொட்டி மூடியால் மூடப்பட்டு இருந்த வங்கி ஏடிஎம் இயந்திரம்



**திருமங்கலம்.ஏப்.28.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் வங்கியின் ஏடிஎம் அறையிலுள்ள பணம் செலுத்திடும் இயந்திரம் குப்பை தொட்டி மூடியால் மூடப்பட்டிருந்த நிகழ்வு வாடிக்கையாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் மதுரை சாலையில் அரசுக்கு சொந்தமான வங்கி செயல்பட்டு வருகிறது. இங்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான வாடிக்கை யாளர்கள் தங்களது பல்வேறு தேவைகளுக்கு வந்து செல்வது வழக்கம்.இந்த வங்கியின் வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் பணம் செலுத்துவதற்கும், பணம் எடுப்பதற்கும் ஏடிஎம் மிஷின்கள் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று காலை ஏடிஎம் மிஷின்கள் உள்ள அறையில் பணம் செலுத்தும் இயந்திரம் பழுதடைந்தது. இந்த இயந்திரம் பழுதடைந்திருப்பது குறித்து முறையாக அட்டையில் எழுதி வைப்பதற்கு பதிலாக அங்கிருந்த குப்பைத்தொட்டி மூடியால் மூடி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு பணம் எடுக்க மற்றும் செலுத்த வங்கிக்கு வந்த வாடிக்கை யாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.இதனிடையே இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

# தர்மத்துப்பட்டியில் 5 பசுமாடுகள் திருட்டு: தனிப்படை போலீசார் தீவிர விசாரணை

**வத்தலகுண்டு, ஏப். 28-**

திண்டுக்கல் மாவட்டம் விருவீடு அருகே தர்மத்துப்பட்டியில் ஒரே நாளில் விலை உயர்ந்த ஐந்து பசுமாடுகள் திருட்டு போனது இதுகுறித்து விருவீடு போலீசார் வழக்கு பதிவு செய்த நிலையில் தனிப்படை போலீசார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர் விருவீடு அருகே தர்மத்துப்பட்டி, நாகைய கவுண்டன்பட்டி யில் தோட்டத்தில் கட்டி போட்டு இருந்த தர்மத்துப்பட்டியைச் சேர்ந்த தங்கராஜ் என்பவருக்கு சொந்தமான ஒரு பசு மாடும் அதே ஊரைச் சேர்ந்த பெருமாள் என்பவருக்கு சொந்தமான ஒரு பசு மாடும் மற்றும் அதன் அருகில் உள்ள நாகைய கவுண்டன்பட்டி முனுசாமி என்பவருக்கு சொந்தமான மூன்று பசுமாடும் ஒரே நேரத்தில் காணாமல் போனது. இது குறித்து குரு வீடு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஜெய்கணேஷ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்த நிலையில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பிரதீப் உத்தரவின் பேரில், நிலக்கோட்டை காவல்துறை துணை கண்காணிப்பாளர் செந்தில்குமார் அறிவுரையின்படி, தனிப்படை போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். மேலும் இப்பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளின் அடிப்படையிலும் விசாரணை செய்து வருகின்றனர். ஒரே நாளில் ஐந்து பசு மாடுகள் காணாமல் போன சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து தருமத்துப்பட்டியை சேர்ந்த ராஜேந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த போது இது மாதிரி சம்பவம் இந்த கிராமத்தில் நடந்ததே இல்லை, தற்போது தோட்டத்தில் கட்டி போட்டு இருந்த விலை உயர்ந்த 5 பசுமாடுகள் காணாமல் போனது மிகவும் அதிர்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.



விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் மகிழ் 24 என்ற தலைப்பில் நடைபெற்ற கலை மற்றும் இலக்கிய விழாவினை கலெக்டர் ஜெயசீலன் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

# பரமக்குடி சித்திரை திருவிழா நிறைவு: கள்ளழகர் சுந்தரராஜ பெருமாள் கோவிலுக்கு சென்றடைந்தார்



**பரமக்குடி, ஏப். 28-**

பரமக்குடி ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோவிலின் சித்திரைத் திருவிழா, கடந்த 18 -ம் தேதி காப்புக் கட்டுடன் தொடங்கியது.

கடந்த ஏப்ரல் 23 ஆம் தேதி பூப் பல்லக்கில் சுந்தரராஜப் பெருமாள் அரக்கு கலர் பட்டுத்தி கள்ளழகர் திருக்கோலத்துடன் வைகை யாற்றில் இறங்கினார். வைகையாற்றில் எழுந்தருளிய கள்ளழகர் பல்வேறு மண்டகப் படிகளுக்குச் சென்று பக்தர்களுக்கு காட்சியளித்தார்.பின்பு,மேலச்சத்திரத்தில் அமைந்துள்ள தல்லாகுளம் மண்டகப்படியில் கள்ளழகர் கோலத்தில் குதிரை வாகனத்தில் எழுந்தருளினார்.அன்று இரவு வண்டியூர் என்னும் காக்காத் தோப்பு மண்டகப் படிக்கு சென்றடைந்தார். அதனை தொடர்ந்து வைகையாற்றில் அமைந்துள்ள வாணிய உறவின் முறையார் மண்டகப் படியில் எழுந்தருளும் பெருமாளுக்கு விடிய விடிய தசாவதார நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்பு பல்வேறு மண்டகப் படிகளில் சென்று பெருமாள் பக்தர்களுக்கு காட்சியளித்தார். நேற்று பரமக்குடி ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் மீண்டும் கள்ளழகர் திருக்கோலத்துடன் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பூ பல்லக்கில் நகர் பகுதியில் எழுந்தருளி முக்கிய வீதிகளில் வலம் வந்து நேற்று மாலை கள்ளழகர் சுந்தரராஜபெருமாள் கோவிலை சென்றடைந்தார்.அதனைத் தொடர்ந்து கண்ணாடி சேவை நடைபெற்றது.இத்திருவிழா ஏற்பாடுகளை சுந்தர ராஜ பெருமாள் கோயில் மேனேஜிங் டிரஸ்டி ரெங்காச்சாரி தலைமையில் நீலகண்டன்,ரமேஷ் பாபு, கிரிதரன்,கோவிந்தன் ஆகிய டிரஸ்டிகள் செய்தனர்.

# முன்பதிவு இல்லாத ரயில் டிக்கெட் எடுக்கும் யூடிஎஸ் செயலியில் மாற்றம்: பயணிகள் வரவேற்பு




**திருமங்கலம், ஏப். 28-**

முன்பதிவு இல்லாத ரயில் டிக்கெட் எடுக்கும் யூடிஎஸ் செயலியில் புதிதாக செய்யப்பட்டுள்ள மாற்றத்தால் பிளாட்பாரம் மற்றும் ரயில் டிக்கெட்டுகளை எளிதில் பெற முடியும் என்பதால் இதற்கு பயணிகள் மகிழ்வுடன் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

ரயில் பயணங்களை மேற்கொள்வதற்கு முன்பதிவில்லாத ரயில் டிக்கெட்டுகளை பெற்றிட டிக்கெட் வழங்கும் மையங்களில் நீண்ட நேரம் காத்திருக்காமல் எளிதாக டிக்கெட் எடுக்கும் வகையில் யூடிஎஸ் என்ற செல்போன் செயலி தற்போது உபயோகத்தில் உள்ளது. இதன் வாயிலாக முன்பதிவில்லாத டிக்கெட், பிளாட்பாரம் டிக்கெட் மற்றும் சீசன் டிக்கெட் பெற்றிட முடியும். எனினும் அனைத்து இடங்களில் இருந்தும் இந்த செயலியை பயன்படுத்த முடியாத நிலை பயணிகளுக்கு இருந்து வந்தது. குறிப்பாக வெளி இடங்களில் இருந்து டிக்கெட் பதிவு செய்வதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் இருந்தது.தற்போது இந்த கட்டுப்பாட்டு எல்லைகளை ரயில்வே நிர்வாகம் முற்றிலுமாக நீக்கியுள்ளது. இதையடுத்து யூடிஎஸ் செயலி வாயிலாக ரயில் நிலையத்தின் அருகே அல்லது வசிப்பிடத்தில் இருந்தபடி முன்பதிவில்லாத டிக்கெட் எடுத்துக் கொள்ளலாம்.

இருப்பினும் டிக்கெட் எடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் பயணம் மேற்கொள்ளவுள்ள ரயில் நிலையத்தை அடைந்து விட வேண்டும். இந்த செயலியில் ரயில் நிலையத்தின் உள்பகுதியில் இருந்தபடி டிக்கெட் எடுத்திட முடியாது.இது தொடர்பாக ரயில்வே அதிகாரிகள் கூறுகையில்: முன்பு வெளி இடங்களில் இருந்தபடி யூடிஎஸ் செயலி மூலம் முன்பதிவில்லா ரயில் டிக்கெட் எடுப்பதில் ஜியோ பென்சிங் கட்டுப்பாடுகள் இருந்தது. தற்போது, இந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் ரயில்வே நிர்வாகம் நீக்கியுள்ளது. இதன் மூலம் முன்பதிவில்லாத டிக்கெட், புறநகர் ரயில் டிக்கெட் மற்றும் பிளாட்பாரம் டிக்கெட் போன்றவற்றை செல்போன் செயலி வாயிலாக வீட்டில் இருந்தபடியே எடுத்துக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. ரயில்வே துறையின் இந்த நடவடிக்கை ரயில் பயணிகள் மத்தியில் வர வேற் பினை பெற்றுள்ளது.

# காளான் வளர்ப்பு குறித்து வேளாண் மாணவர்கள் செயல்முறை விளக்கம்



**ரெட்டியார்சத்திரம்,ஏப். 28-**

ரெட்டியார்சத்திரம் வேளாண்மைதுறை சார்பில் பொள்ளாச்சி வாணவராயர் வேளாண் கல்லூரிமாணவர்கள் அகிலேஷ்,பாலசூர்யா,தினேஷ், ஜெயக்குமார், கிஷோர், சஃபியுல்லாஹ், ரகு, சாம்,சிவகுரு,விகாஷ் ரெட்டியார்சத்திரம் வட்டத்தில் கிராம தங்கல் திட்டம் சார்பாக களப்பணிக்காக கசவணம்பட்டியில் விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்விற்கு வாணவராயர் கல்லூரி பேராசிரியர் டாக்டர்.ஹரிஷங்கர் தலைமை தாங்கினார்.கல்லூரியின் மூன்றாம் ஆண்டு மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

# ஆளுங்கட்சி செய்ய வேண்டியதை எதிர்க்கட்சியாக இருந்து எடப்பாடியார் பொதுமக்களுக்கு சேவை செய்து வருகிறார்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி



திருமங்கலம்.ஏப்.28-

மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க சார்பில் செல்லம்பட்டி, உசிலம்பட்டி, உத்தப்ப நாயக்கனூர், பேரையூர், அத்திப்பட்டி ஆகிய இடங்களில் நீர் மோர் பந்தலை திறந்து பொதுமக்களுக்கு இளநீர், சர்பத், நுங்கு, மோர் ஆகியவற்றை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தேனி நாடாளுமன்ற வேட்பாளர் வி.டி. நாராயணசாமி, அமைப்புச் செயலாளர் மகேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நீதிபதி, மாநில நிர்வாகிகள் தனராஜன், சோலை ரவி, ராஜேஷ் கண்ணா, முத்துச்செல்வம், ஒன்றிய கழக செயலாளர்கள் செல்லம்பட்டி ராஜா, பிச்சை ராஜன், நகரச் செயலாளர் பூமா ராஜா, மாவட்ட கழக பொருளாளர் திருப்பதி, மாவட்ட அணி நிர்வாகிகள் செல்லம்பட்டி ரகு, மகேந்திரா பாண்டி, தமிழழகன் சரவணபாண்டி, உசிலை விஜய் உட்பட கலந்து கொண்டனர்.

அப்போது முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசியதாவது.

வெப்ப சலனத்தால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதனை தொடர்ந்து தேர்தல் ஆணையத்திடம் எடப்பாடியார், ஆளுங்கட்சி செய்ய வேண்டியதை எதிர்க்கட்சி இருந்து மக்களுக்கு பணி ஆற்றி வருகிறார். குடிநீர் ,வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர் காலங்களில் தேர்தல் விதி முறை தவிர்க்கப்படும். அதன் மூலம் தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று தமிழக முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளிலும் நீர் மோர் பந்தலை திறந்து மக்களுக்கு வழங்கி வருகிறார்.

தற்போது வெயிலில் தாக்கத்தால் பொதுமக்கள், மாணவர்கள், வயதானவர்கள், குழந்தைகள், தொழிலாளர் என அனைவரும் பாதிப்படைந்து வருகிறார்கள். குறிப்பாக அமைப்பு சாரா தொழிலாளர்கள் வெயிலில் தாக்கத்தால் கடுமையாக அவதி அடைந்து வருகிறார்கள் . ஆனால் முதல்வர் யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அறிவிப்பு வெளியிடுகிறார். இது போன்ற காலங்களில் தொழிலாளர்கள் செய்யும் வேலை நேரத்தை வெயிலுக்கு முன்பு, வெயிலுக்கு பின்பு என்று மாற்றி அமைக்க வேண்டும் மேலும் மக்களுக்கு தேவையான மருத்துவ வசதியை ஏற்படுத்த வேண்டும்.

வெயில் கொடுமை தாங்காமல் திருமங்கலத்தில் ஒரு மாற்றுத்திறனாளி சுருண்டு விழுந்து உள்ளார்.இது போன்ற வெப்ப சலனத்தால் பல உயிர்கள் பறிபோகிறது ஆனால் அரசு வேடிக்கை பார்க்கிறது. மனித உயிர்கள் மட்டுமல்ல அது கால்நடைகள் ,பயிர்கள் எல்லாம் கருகின்றன இதற்குரிய கணக்கெடுப்பை நடத்தி உரிய நிவாரணங்களை தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று அதை வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

# பட்டிவீரன்பட்டி பத்திரகாளியம்மன் கோவிலில் மழை வேண்டி நடந்த திரு விளக்கு பூஜை

வத்தலக்குண்டு ஏப். 28-

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி பத்ரகாளியம்மன் கோவிலில் சித்திரை திருவிழா மிக சிறப்பாக நடை பெற்று வருகிறது திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திரு விளக்கு பூஜை மிக சிறப்பாக நடைபெற்றது பூஜையில் பட்டிவீரன்பட்டி மற்றும் அண்ணா நகர் காந்திபுரம் பகுதியைச் பெண்கள் மழை வேண்டியும் கொடிய நோயிலிருந்து மக்களை காக்கவும் 1008 மந்திரங்கள் முழங்க திருவிளக்கு பூஜை . இந்த நிகழ்ச்சியில் லட்சார்ச்சனை மற்றும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

இன் நிகழ்ச்சிக்கு பட்டிவீரன்பட்டி இந்து நாடார்கள் உறவின்முறை பரிபாலன சங்க தலைவர் முரளி செயலாளர் மோகன் குமார் ஆகியோர் தலைமை வகித்தனர். குத்து விளக்கு பூஜையில் நளினி மோகன் அருணாச்சலம், சுமதி முரளி ஆகியோர் முன்னேற்பாடு நடத்தினார்கள். 1008 குங்கும பூஜை மற்றும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது நிகழ்ச்சியில் என்எஸ்விவி பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் மெட்ரிக் பள்ளி தலைமை ஆசிரியர் ஆத்தியப்பன் தலைமையில் திருப்பணியில் ஈடுபட்டனர் கலந்து கொண்ட அனைவருக்கும் பட்டிரம் பற்றி நாடார் சங்கத்தின் சார்பில் திருவிளக்கு பூஜை சாமானங்கள் வழங்கப்பட்டன.

# மூத்தோர் தடகள போட்டி: தமிழ்நாடு போலீஸ் எஸ்.ஐ., கிருஷ்ணமூர்த்தி சாதனை



சிவகங்கை . ஏப்.28

தேசிய அளவிலான மூத்தோர் தடகள போட்டியில் 5000 மீட்டர் நடை பிரிவில் தமிழ்நாடு போலீஸ் எஸ்.ஐ முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மும்பையில் நடந்து வரும் தேசிய அளவிலான மூத்தோர் தடகள போட்டியின் 5000 மீட்டர் நடை பிரிவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தைச் சேர்ந்த எஸ்.ஐ கிருஷ்ணமூர்த்தி (54).லண்டன், கனடா உள்ளிட்ட இடங்களில் நடந்த உலக அளவிலான காவல் துறையினருக்கான தடகள போட்டியில் 2 முறை தங்கமும், ஒரு முறை வெள்ளியும் நடை போட்டியில் இவர்வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய அளவிலான நடை போட்டியில் வெற்றி பெற்ற இவருக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

# ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் வறட்சியால் கருகி வரும் மிளகாய், பருத்தி செடிகள்

ராமநாதபுரம், ஏப்.28-

ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில் வறட்சியால் பருத்தி மற்றும் மிளகாய் செடிகள் கருகி வருகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளான செங்குடி, பூலான்குடி, வாணியக்குடி, வண்டல், வரவணி, சேத்திடல், சீனாங்குடி, அடவிலங்கான், சவேரியார் பட்டினம், புல்லமடை, சிலுகவயல், வல்லமடை, செங்கமடை பிச்சனாகோட்டை, இருதயபுரம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் அதிகளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு பெய்த தொடர்மழையால், மிளகாய் செடிகள் பெரிதும் பாதிப்படைந்து அழுகி நாசமானது.

இதை தொடர்ந்து, மீண்டும் விவசாயிகள் மிளகாய் செடிகளை நடவு செய்து பாதுகாத்து வந்தனர். அதே போல் பருத்தி பயிரிடப்பட்டு பருத்தி விளைச்சலை எட்டியது. இந்நிலையில் கடந்த சில வாரங்களாக இப்பகுதியில் தொடர்ந்து நிலவி வரும் கடும் கோடை வெயிலால் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி மற்றும் மிளகாய் செடிகள் வெப்பத்திற்கும், வறட்சிக்கும் தாக்கு பிடிக்க முடியாமல், கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கண்மாய், குளங்களில் தேங்கியுள்ள தண்ணீரை, வயல்களுக்கு பாய்ச்சி செடிகளை காப்பாற்றும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். தண்ணீர் பாசன வசதி இல்லாத பெரும்பாலான பகுதிகளில் இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் வரை மகசூல் தர வேண்டிய பருத்தி மற்றும் மிளகாய் செடிகள் இப்பொழுதே முடிவுக்கு வந்துவிட்டன. இதனால் விவசாயிகள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

# வாழை இலை கடும் விலை உயர்வு

வத்தலகுண்டு ஏப் 28

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பகுதியில் இருநூறு ஏக்கருக்கு மேலாக வாழை விவசாயம் நடைபெற்று வருகிறது. இங்கு வாழை இலை வாழைப்பழம் சரியான விலை கிடைப்பதில்லை என கூறுகின்றனர். இது சம்பந்தமாக வத்தலகுண்டை சேர்ந்த ஆஷா பட்டி கண்ணன் கூறும் பொழுது தற்போது வெயில் காரணமாக வழக்கத்தை காட்டிலும் விற்பனைக்கு கொண்டுவரப்படும் வாழை இலைகள் வறுத்து குறைவாகவே உள்ளது இதனால் 200 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு வாழை இலை 2000க்கு விற்பனை செய்யப்படுகிறது.திடீரென அப்பப்போது மழையும் காற்றும் பெய்வதால் இலைகள் சேதமடைகின்றன இவற்றை பயன்படுத்தி விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனக் கூறினார்

# நிலக்கோட்டையில் சொத்தை எழுதி வாங்கி விட்டு கைவிட்ட மகன் மீது தந்தை புகார்

வத்தலக்குண்டு ஏப். 28-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை முதல் வார்டு பகுதியை சேர்ந்தவர் மலைச்சாமி ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறார். இன்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மலைச்சாமி தனக்கு சொந்தமான வீட்டை தனது மகன் விஜய கண்ணனுக்கு தானமாக எழுதி கொடுத்துள்ளார் தற்போது மலைச்சாமிக்கு உடல்நிலை சரியில்லாமல் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு ஆடு மேய்ப்பு தொழிலுக்கு செல்ல முடியாத மலைச்சாமி வீட்டில் முடங்கினார். வீட்டில் இருப்பவர்கள் மலைச்சாமியை பாரமாக நினைக்கத் தொடங்கினர்கள். சாப்பாடு மற்றும் மருத்துவச் செலவுகள் எதுவும் கவனிக்கப்படுவதில்லை இதனால் மனம் உடைந்த மலைச்சாமி தொடர்ந்து தனது பாதுகாப்பாக கடைசி காலம் வரை காப்பாற்றுவான் என நம்பினேன் ஆனால் என் மகன், சொத்து கைமாறியவுடன் தந்தையை கைவிட்டு உள்ளார். மேலும் மனைவியும் இவரை விட்டு பிரிந்து விட்டார் .



மனைவி மற்றும் மகன் இருவரும் கைவிட்டதால் சாப்பாட்டுக்கு வழி இல்லாமலும் தங்குவதற்கு இடமில்லாமலும் வயதான காலத்தில் மலைச்சாமி தனியாக தவித்துள்ளார். கிடைத்ததை சாப்பிட்டும், தெருவில் உறங்கியும் தனது அன்றாட பொழுதை கழித்த மலைச்சாமி தன்னை ஏமாற்றிய மகன் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, தனக்கு சொத்தை மீட்டு தாருங்கள் என நிலக்கோட்டை வட்டாட்சியர் தனுஷ்கோடியிடம் மனு கொடுத்துள்ளார். இதனைத் தொடர்ந்து இந்த மனு கோட்டாட்சியர் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. தனக்கு உரிய நியாயம் வழங்க வேண்டும் என தமிழக முதல்வருக்கு மலைச்சாமி உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தூத்துக்குடியில் வரத்து குறைவால் உப்பு விலை திடீர் அதிகரிப்பு

தூத்துக்குடி. ஏப்.28-

தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது, வெயிலின் தாக்கம் அதிகரித்து இருப்பதால் உப்பு உற்பத்தி பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. அதே வேளையில் தூத்துக்குடியில் உப்பு விலை திடீரென உயர்ந்து உள்ளது. கடந்த டிசம்பர் மாதம் டன் ரூ.2 ஆயிரத்துக்கு விற்பனையான பழைய உப்பின் விலை தற்போது தரத்துக்கு ஏற்ப ஒரு டன் ரூ.4 ஆயிரம் வரையிலும் விற்பனையாகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பெருமழையால் தாமிரபரணியில் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக ஏரல், ஆறுமுகநேரி மற்றும் உப்பளங்களில் வெள்ளம் புகுந்தது. அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் கிலோ உப்பு வெள்ளத்தால் நாசமானது. மேலும், தூத்துக்குடியில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் உப்பு அளவு வெகுவாக குறைந்துவிட்டது. வரத்து குறைந்ததால் உப்பு விலை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. புதிதாக உற்பத்தியாகி வரும் உப்பு ஒரு டன் ரூ.1,500 முதல் ரூ.2 ஆயிரம் வரை விற்பனையாகிறது. உப்பு விலை உயர்ந்து காணப்படுவதால், தூத்துக்குடியில் இருந்து உப்பு இறக்குமதி செய்த கேரளா, கர்நாடகா போன்ற பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள், தற்போது குஜராத்தில் இருந்து உப்பு இறக்குமதி செய்ய தொடங்கி உள்ளனர். இதனால், தூத்துக்குடி உப்பு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# நுங்கு சீசன் துவக்கம்

மதுரை, ஏப் 28-

கோடை வெயில் வழக்கத்தைவிட அதிகரித்து காணப்படுகிறது. இதனால் உடல் சூட்டை குறைக்கும் வகையில் இளநீர், மோர் உள்ளிட்டவற்றை பொதுமக்கள் அதிகளவில்பருகி வருகின்றனர். தற்போது பேரையூர் பகுதிகளில் நுங்கு விற்பனை அதிகரித்துள்ளது. நுங்கு வியாபாரிகள் ஒரு நுங்கு பத்து ரூபாய் என விற்பனை செய்கின்றனர். கோடை தொடங்கிய நிலையில் உடலுக்கு குளிர்ச்சியான நுங்கு சீசனும் துவங்கியுள்ளதால் பொதுமக்கள்ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். ஆடி மாதம் வரை நுங்கு சீசன் இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

# திண்டுக்கல் மாநகராட்சியில் வரும் 30-ம் தேதிக்குள் சொத்து வரி செலுத்தினால் 5 சதவீத ஊக்கத்தொகை

திண்டுக்கல், ஏப். 28

திண்டுக்கல் மாநகராட்சியில் வரும் 30-ம் தேதிக்குள் சொத்துவரி செலுத்துவோருக்கு 5 சதவீதம் வரை ஊக்கத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 48 வார்டுகளிலும் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், தொழிற்கூட கட்டடங்களுக்கு 2024-2025ம் நிதியாண்டின் முதலாம் அரையாண்டுக்கான (30.9.2024 வரையிலான) சொத்து வரி தொகைகளை சம்பந்தப்பட்டவர்கள் செலுத்த வேண்டும். மேலும் வரும் 30.4.2024ம் தேதிக்குள் சொத்து வரியை செலுத்தினால் 5 சதவீதம் வரை ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்த வாய்ப்பை பொதுமக்கள் பெற்று பயனடையலாம் என்றார்.

## சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில்

# முழுநேர பட்டய பயிற்சிக்கான மாணவர் சேர்க்கைக்கான முன்பதிவு நாளை துவக்கம்

சிவகங்கை, ஏப் 28-

சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் முழுநேர பட்டய பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிவகங்கை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஓர் அங்கமாக செயல்படும் சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 2024-25ம் கல்வியாண்டில் நடைபெற உள்ள முழு நேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சிக்கான மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான முன்பதிவு வரும் 29-ம் தேதி துவங்குகிறது. செப்டம்பரில் பயிற்சி துவங்கி நடைபெறும். பயிற்சி காலம் ஓராண்டாகும். இருபருவ முறைகளில் பயிற்சி நடைபெறும். பயிற்சிக்கான பாடத்திட்டம் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

விண்ணப்பிப்பதற்கான தேதி மற்றும் பயிற்சி கட்டண விபரங்கள் விரைவில் வெளியிடப்படும். இதில் பங்கேற்க விரும்புவோர் குறைந்தபட்ச கல்வி தகுதி பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் 17 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும். www.tncuicm.com என்ற இணையதளத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். கூடுதல் விபரங்களுக்கு திருப்பத்தூர் சாலை, காஞ்சிரங்காலில் செயல்படும் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தை தொடர்பு கொள்ளலாம். மேலும் 04575-243995 என்ற எண்ணையும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் தேர்வு: விருதுநகரில் பயிற்சிகள் தீவிரம்

விருதுநகர் ஏப். 28-

விருதுநகர் மாவட்ட நிர்வாகம் சார்பில் அரசு பள்ளி மாணவர்களில் 77, ஆண்கள், 302 பெண்கள் உட்பட 379 பேருக்கும்,உதவி பெறும் பள்ளி மாணவர்களில் ஆண்கள் 91 பெண்கள் 342 என 433 பேருக்கும் மொத்தம் 812 மாணவர்களுக்கு நீட் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அருப்புக்கோட்டை சிஎஸ்ஐ மேல்நிலைப்பள்ளி, விருதுநகர் சத்திரிய வித்யாலயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருத்தங்கல் எஸ் என் ஜி மேல்நிலைப்பள்ளி, ராஜபாளையம் நாடார் மேல்நிலைப்பள்ளி என்ற நான்கு மையங்களில் இந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர பல்வேறு தனியார் பள்ளி மாணவர்களும் பயிற்சி மையங்கள் மூலமும் பயிற்சி பெற்று வருகின்றனர். மே 5 நீட் தேர்வு நடக்கிறது. இதற்காக இறுதி கட்ட பயிற்சிகள் தீவிரமடைந்துள்ளன.

# ரியல்மி தனது ரியல்மி நார்சோ லைன்அப்பை ரியல்மி நார்சோ 70 சீரிஸ் 5ஜி உடன் விரிவுபடுத்துகிறது

கோவை, ஏப். 28-

மிகவும் நம்பகமான ஸ்மார்ட்போன் சேவை வழங்குநரான ரியல்மி இன்று ரியல்மி நார்சோ 70 சீரிஸ் 5ஜ-ஐ அறிமுகப்படுத்தியது. இது ரியல்மி நார்சோ லைன் அப்பில் புதிய சேர்க்கையாகும். இந்தத் சீரிஸ் ரியல்மி நார்சோ 70x 5G & ரியல்மி நார்சோ 70 5G ஆகிய இரண்டு புதுமையான ஸ்மார்ட்போன்களை வெளியிட்டது. இது குறித்து ரியல்மி செய்தித் தொடர்பாளர் கூறுகையில், எங்கள் பயனர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் பிரிமியம் அம்சங்களை வழங்கும் வகையில் எங்கள் அர்ப்பணிப்புக்கான சான்றாக, ரியல்மி நார்சோ 70 சீரிஸ் 5ஜி அறிமுகத்தை தெரிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்று கூறினார்.

ரியல்மி நார்சோ 70x 5ஜி ஆனது ஒரு பெரிய 5000 எம்ஏஹெச் பேட்டரியைக் கொண்டுள்ளது மற்றும் 45டபிள்யூ சூப்பர்வூக் சார்ஜை சப்போர்ட் செய்கிறது. இது விரைவான சார்ஜிங் மற்றும் நீண்ட கால பேட்டரி ஆயுளுக்கு வகை செய்கிறது. 120 Hz அல்ட்ரா ஸ்மூத் டிஸ்ப்ளே துடிப்பான வண்ணங்களையும் ஆழமான கான்ட்ராஸ்டையும் வழங்குகிறது. இது ஒரு அற்புதமான காட்சி அனுபவத்தை உறுதி செய்கிறது. செக்மென்ட்டின் மெலிய 7.69 எம்எம் அல்ட்ராஸ்லிம் ஹரிசான் டிசைன் மற்றும் வெறும் 188கிராம் எடை கொண்ட லேசான உடலமைப்பு ஆகியவை ஃபோனின் அழகியலை உயர்த்துகின்றன. இந்த ஸ்மார்ட்ஃபோனானது அதன் கோரில், ஸ்மார்ட்ஃபோன் மீடியாடெக் டைமென்சிட்டி 6100+ 6என்எம் 5ஜி சிப்செட் மூலம் இயக்கப்படுகிறது. இது அதிக தெளிவுத்திறன் கொண்ட படங்களை எளிதாக படம்பிடிக்க உதவுகிறது. ரியல்மி நார்சோ 70x 5ஜி இரண்டு அசத்தலான நிறங்களில் கிடைக்கிறது: மிஸ்டி ஸ்பாரஸ்ட் க்ரீன் மற்றும் ஸ்னோ மவுன்டென் ப்ளூ மற்றும் இரண்டு ஸ்டோரேஜ் வகைகள்: 4ஜிபி+128ஜிபி விலை ரூ. 11999, மற்றும் 6 ஜிபி + 128 ஜிபி விலை ரூ. 13499 ஆகும்.

# கொடைரோடு அருகே கிணற்றில் மூழ்கி இரண்டு இளைஞர்கள் பலி

வத்தலகுண்டு, ஏப். 28-

திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகே கிணற்றில் குளிக்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் தண்ணீரின் மூழ்கி பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கல்லுப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள் முத்து கிருஷ்ணன் மற்றும் அரவிந்த் நண்பர்களான இவர்கள் நேற்று இரவு அப்பகுதியில் உள்ள செங்கல் காளவாசலுக்கு வேலைக்கு சென்று விட்டு இன்று காலை விடு திரும்பியுள்ளனர் அப்போது அப்பகுதியில் இருந்த கிணற்றில் குளித்துவிட்டு செல்ல நண்பர்கள் இருவரும் கிணற்றுக்குள் இறங்கியுள்ளனர் கிணற்றில் இருவரும் குளித்துக் கொண்டிருந்த போது முத்துகிருஷ்ணன் திடீரென தண்ணீரில் மூழ்கத் தொடங்கினர் இதனை பார்த்த அவரது நண்பர் அரவிந்த் முத்துக்கிருஷ்ணனை காப்பாற்ற சென்றார் ஆனால் இருவரும் தண்ணீரில் மூழ்கி மாயமாகினர்

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த நிலக்கோட்டை தீயணைப்புத் துறையினர் கிணற்றுக்குள் மூழ்கிய நண்பர்கள் இருவரையும் தீவிரமாக தேடினர் நீண்ட தேடலுக்கு பின் முத்துக்கிருஷ்ணன் மற்றும் அரவிந்த் இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர் இச்சம்பவம் தொடர்பாக அம்மையநாயக்கனூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# காணவில்லை

எனது பெயரிலான சென்னை சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பத்திர நகல் எண். 3618/2012, சர்வே எண். 38/1, 38/2, பிளாட் NO. 58,59 என்ற எண் கொண்ட ஆவண பத்திரங்கள் கடந்த 10.11.2023 அன்று எனது குடும்ப சூழ்நிலை காரணமாக சென்னையில் இருந்து மதுரைக்கு மாறுதலாகி வந்த போது வழியில் எங்கோ தொலைந்து போய் விட்டது. இது குறித்து காவல் துறைக்கு ஆன்லைன் மூலம் புகார் செய்ததில் CTS24060299 என்ற எண்ணில் கடந்த 19.02.2024-ல் பதிவாகி உள்ளது. எனவே மேற்படி அசல் பத்திர ஆவணங்கள் யாராவது கண்டெடுத்தால் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

இப்படிக்கு,
S. ராஜா, S/O. சிம்சன்
84, வள்ளிமுத்து காம்பவுண்டு, தாமஸ் காலனி,
எஸ்.எஸ். காலனி ரோடு, அரசரடி, மதுரை -625 016
செல்: 90038 61231

# பொது அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம்,மடத்துக்குளம் வட்டம், மெட்ராத்தி கிராமம், ராமலிங்காபுரம், கதவு எண் 100ல் வசித்து வந்து தற்போது பழனி வட்டம் புஸ்பத்தூர் கிராமம், வயலூரில் வசிக்கும் செல்லப்பன் மகன் பரமசிவம் ஆகிய எனது கட்சிக்காரர் கொடுத்த தகவல்படி தெரிவிக்கப்படும் பொது அறிவிப்பு என்னவென்றால், எனது கட்சிக்காரர் அவரது சகோதரர் செல்லத்துரை என்பவருடன் கடந்த 24/07/1985ம் தேதியில் கணியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 812/1985-ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட பாக சாசன ஆவணத்தின் அசலை வயலூரில் உள்ள தனது வீட்டிலிருந்து கடந்த 15/04/2024-ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு வயலூர் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் உள்ள கடையில் ஜெராக்ஸ் எடுக்க கொண்டு சென்ற போது மேற்படி அசல் பாக சாசன ஆவணத்தை வழியில் எங்கேயோ தவற விட்டு விட்டார் மேற்படி அசல் பாக சாசன ஆவணத்தை பல இடங்களில் தேடியும் கிடைக்க பெறவில்லை. ஷை அசல் பாக சாசன ஆவணம் கிடைக்கப் பெற்றவர்கள் என்னிடமோ அல்லது எனது கட்சிகாரரிடமோ திரும்ப ஒப்படைப்பு செய்யுமாறு இந்த பொது அறிவிப்பின் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்

M.K.SHIVAKUMAR B.Sc.,B.L.,M.L,
ADVOCATE&NOTARY , COMMISIONER OF OATHS,
UDUMALPET,Tirupur Dt., Cell: 98426 64707

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.
ந.க.எண்.1097/2024/ஆ2
M.பரமசிவம்
த/பெ.முத்தையா அம்பலம்
14,தெற்குத் தெரு
செங்குளம், திருமங்கலம்
மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
கனம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருமங்கலம்.
--------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாராகிய நான், எனது தாயார் M.தங்கம்மாள், க/பெ. முத்தையா அம்பலம் என்பவர் 09.04.2005-ம் தேதி திருமங்கலம்,செங்குளத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 10தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
M.பரமசிவம்
செங்குளம், திருமங்கலம்.

# பொதுஅறிவிப்பு

எமதுகட்சிக்காரரான திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் டவுன், எம்.வி.எம். நகர், 5வது மெயின் வீதி, 6வது குறுக்குத் தெரு, க.எ.143/8 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.முத்து அவர்களின் மகன் ததிரு.M.கோவிந்தராஜ் அவர்களின் முறையான தகவலின் பேரில் கொடுக்கப்படும் பொதுஅறிவிப்பு என்னவென்றால் எமதுகட்சிக்காரருக்கு சொந்தமான சொத்தின் மூலஆவணங்களான, திண்டுக்கல் ஜாயிண்ட் 2 சார்பதிவாளர் அலுவலகத்தின் கடந்த 17.05.2000 ஆவணஎண்:1719/2000ன்படியான அசல் கிரையபத்திரம் மற்றும் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் கடந்த 30.04.2001 ஆம்தேதிய ஆவணஎண்: 1234/2001ன்படியான அசல் கிரையபத்திரம் ஆகிய இரண்டு அசல் கிரையபத்திரங்களையும், எமதுகட்சிக்காரர் கடந்த 06.04.2024ஆம்தேதி காலை சுமார் 9.00மனிக்கு ஜெராக்ஸ் எடுப்பதற்காக ஒரு பிளாஸ்டிக் பையில் வைத்துக்கொண்டு, திண்டுக்கல் பஸ்ஸ்டாண்டிற்கு வந்து வாகனத்தை நிறுத்தி பார்த்த போது, ஷை பிளாஸ்டிக்பை மேற்படி இரண்டு அசல்கிரையபத்திரங்களுடன் காணாமல் போய்விட்டது. மேற்கண்ட எமதுகட்சிக்காரருக்கு சொந்தமான மேற்படி இரண்டு ஆவணங்கள் யாருக்கேனும் கிடைக்கபெற்றால் எனது முகவரியிலோ அல்லது எமதுகட்சிக்காரரின் முகவரியிலோ தெரிவிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்துவிபரம்

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்ரீடி, திண்டுக்கல் ஜாயின்ட் 2ம்நம்பர் சப்டி, திண்டுக்கல் மேற்கு தாலுகா, செட்டிநாயக்கன்பட்டி கிராமபுலத்தில், சர்வே.எண். 643/1Bக்கு சம்மந்தபட்ட நம்பரில் விற்பனை செய்யப்பட்டுள்ள மனைகளில், சர்வே எண்.643/36மனைக்குட்பட்ட 1 ஆம்நபர் மனையில் கண்ட சுமார் 1650சதுரடி மனையும், அதில் சுமார் 610சதுரடி அளவில் கட்டப்பட்டுள்ளதும், டோர். நிர்.2/681/2க்கும் சம்மந்தபட்ட R.C.லோகடம் மனைவீடு வகையறா சேர்த்தும், அதில் உள்ள சகல பிட்டிங் மற்றும் சகல மாமூல் பாத்தியங்களும் சேர்த்து கட்டுபட்டது.

B.R.MANIKANDAN., B.A., B.L., M.L.M., ADVOCATE,
DINDIGUL. Cell no: 9442955553

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

மதுரை வைகை ஆற்றில் எழுந்தருளிய கள்ளழகருக்கு

# அழகர் கோவிலில் 21 பூசணிக்காய் கொண்டு திருஷ்டி கழித்து வரவேற்பு



**மேலூர், ஏப். 28-**

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான, மதுரை வைகையாற்றில் கள்ளழகர் எழுந்தருளும் நிகழ்ச்சி கடந்த 05ஆம் தேதி நடைபெற்றது. இதற்காக கடந்த 03ஆம் தேதி அழகர் கோவிலிலிருந்து கள்ளழகர் என்று அழைக்கக்கூடிய கள்ளழகர். கண்டாங்கிபட்டு உடுத்தி, வேல், வளரியுடம் கள்ளழகர் வேடம் பூண்டு தங்கபல்லக்கில் பல லட்சம் பக்தர்கள் கோவிந்தா என்ற கோஷத்துடன் மதுரைக்கு புறப்பட்டார். வழியில் பல்வேறு மண்டகப்படிகளில் எழுந்தருளியபடி கடந்த 04ஆம் தேதி மதுரை மாநகர் எல்லை பகுதியான மூன்று மாவடி வந்த கள்ளழகரை பக்தர்கள் எதிர்கொண்டு வரவேற்கும் எதிர்சேவை நடைபெற்றது.

இதையடுத்து அன்று இரவு தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் கோவிலில், கள்ளழகருக்கு திருமஞ்சனம் நடைபெற்றதைத் தொடர்ந்து, மதுரை வைகை ஆற்றில் எழுந்தருளுவதற்காக, தங்க குதிரையில் புறப்பட்ட கள்ளழகர். இரவு பழமை வாய்ந்த ''ஆயிரம் பொன்சப்பரத்தில்'' தங்ககுதிரையில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்த பின், 05ம் தேதி அதிகாலை 6 மணியளவில் வைகை ஆற்றில் எழுந்தருளினார்.

இதனைத் தொடர்ந்து 06ம் தேதி தேனூர் மண்டகப்படியில் மாண்டூக மகரிஷிக்கு சாப விமோசனமும் அன்று இரவு ராமராயர் மண்டபத்தில் தசாவதார நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதையடுத்து கடந்த 07-ஆம் தேதி, மதுரையில் உள்ள இராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் பூப்பல்லக்கு நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து மதுரைக்கு புறப்பட்டார் கள்ளழகர் நேற்று காலை 10.30 மணியளவில் அழகர்கோவிலுக்கு வந்து சேர்ந்தார்.

அப்பொழுது அழகாபுரி கோட்டை மற்றும் திருக்கோவில் கோட்டை வாயிலில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தோ, கோவிந்தோ என்ற கோஷத்துடன் மல்லிகை, தாமரை, மரிக்கொழுந்து மற்றும் ரோஜா உள்ளிட்ட பல்வேறு மலர்களால் மலைக்கு திரும்பிய கள்ளழகரை மலர் தூவி வரவேற்றனர். இதனைத்தொடர்ந்து, அழகர்கோவில் காவல்தெய்வமான பதினெட்டாம்படி கருப்பண்ண சாமியிடம் தகவல் அளித்துவிட்டு, கோவில் உள்ளே செல்லும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது சாமியை சுமந்து வரும் சீர்பாத தூக்கிகள், ஆரவாரத்துடன் சுவாமியை குலுக்கி மகிழ்ச்சியை வெளிபடுத்தினர்.

இதனையடுத்து திருக்கோவிலின் உள்ளே கொண்டு செல்லப்பட்ட கள்ளழகருக்கு, திருஷ்டி கழிக்கும் விதமாக 21 பூசணிக்காய்கள் கொண்டு சுற்றி திருஷ்டி கழிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோவில் பட்டர்கள் சுவாமிக்கு சிறப்பு தீபாராதனை காண்பித்து கோவில் பிரகாரத்தில் உற்சவரை நிலைநிறுத்தினர். கள்ளழகர் மதுரை வைகை ஆற்றில் எழுந்தருளும் நிகழ்வதற்காக சென்றுவிட்டு மீண்டும் கோவில் திரும்பும் வரை, 450க்கும் மேற்பட்ட மண்டகப்படிகளில் எழுந்தருளியும், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலித்து விட்டு அழகர்மலையில் உள்ள திருக்கோவிலுக்கு திரும்பிய கள்ளழகருக்கு உடல் அழுப்பை போக்கும் விதமாக திருக்கோவில் பட்டர்கள் கள்ளழகர் உற்சவ திருமேனியை பிடித்து விடும் நிகழ்வும் நடைபெற்றது

# லாடனேந்தல் வீரமாகாளியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா

**சிவகங்கை, ஏப். 28-**

லாடனேந்தல் கிராமத்தில் வீரமாகாளியம்மன் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம் லாடனேந்தல் கிராமத்தில் விநாயகர் கோயில், அய்யனார் கோயில், முனியாண்டி சுவாமி கோயில், ஊர்க்காவலன் சுவாமி கோயில், வீரமாகாளியம்மன் கோயில், முத்தையா சுவாமி கோயில், காமாட்சி அம்மன் கோயில் ஆகிய ஏழு கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை வேலம்மாள் கல்வி அறக்கட்டளை தலைவர், திருப்பணிக்குழு தலைவர் எம்.வீ.முத்துராமலிங்கம் மற்றும் லாடனேந்தல், பாப்பாங்குளம் கிராமமக்கள் செய்திருந்தனர்.

முன்னதாக அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்யாஹவாசனம், தன பூஜை, மகா கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், வாஸ்து சாந்தி, ரக்ஷாபந்தனம், கும்பஅலங்காரம், கலா ஆகாஷணம், காலயாக பூஜை, திரவ்யாஹீதி, பூர்ணாஹீதி, தீபாராதனை, மகா பூர்ணாஹீதியுடன் கலசங்கள் புறப்பாடு நடைபெற்றது. கடந்த 3 நாட்களாக நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் ஆட்டம் கலாஸ் மிதி கேரளா குழுவினரின் செண்டை மேள கச்சேரி, சின்னத்திரை கலக்கப்போவது யாரு புகழ் மதுரை முத்து குழுவினரின் மாபெரும் நகைச்சுவை நட்சத்திர இசை சங்கமம், லஷ்மண் ஸ்ருதி இசையகம் குழுவினரின் இசை கச்சேரி உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# திருமங்கலத்தில் குடிநீர் திருடும் மின்மோட்டர்களை பறிமுதல் செய்திட பொதுமக்கள் கோரிக்கை

**திருமங்கலம், ஏப். 28-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் செயற்கையான முறையில் குடிநீர் தட்டுப்பாட்டை உருவாக்கிடும் மின் மோட்டார்களை பறிமுதல் செய்திட வேண்டும் என திருமங்கலம் நகராட்சி நிர்வாகத்திற்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் கோடை வெயிலின் தாக்கம் நாள்தோறும் அதிகரித்தபடி உள்ளது. இந்நிலையில் திருமங்கலம் நகரைச் சுற்றியுள்ள நீராதாரங்கள் அனைத்தும் வறண்டு வருவருகிறது. இருப்பினும் காவிரி கூட்டுகுடிநீர் திட்டம் மற்றும் வைகை குடிநீர் திட்டத்தின் மூலம் திருமங்கலம் நகரிலுள்ள 27 வார்டுகளைச் சேர்ந்த பொது மக்களுக்கும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. திருமங்கலம் நகராட்சி நிர்வாகத்தின் சிறப்பான நடவடிக்கையின் காரணமாக பொதுமக்களுக்கு நாள்தோறும் தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கப்பட்டு வரும் போதிலும் நகராட்சி சார்பில் வீடுகளுக்கு வழங்கப்படும் தண்ணீரை சிலர் மின்-மோட்டார்களை பயன்படுத்தி திருடி வருகின்றனர்.

இதனால் குடிநீர் இணைப்பு பெற்றுள்ள மற்ற பயனாளிகளின் வீடுகளுக்கு குடிநீர் செல்வதில் சிக்கல் ஏற்படுவதுடன் திருமங்கலம் நகரில் செயற்கையான குடிநீர் தட்டுப்பாடு உருவாகி வருகிறது. எனவே கோடை கால அக்னி நட்சத்திரம் விரைவில் தொடங்கவுள்ள நிலையில் திருமங்கலம் நகரில் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக மின்மோட்டார்களை பொருத்தி குடிநீரை திருடுபவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் அதனை பறிமுதல் செய்து அபராதம் விதித்திட வேண்டும் என நகராட்சி நிர்வாகத்திற்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சாத்தூர் அருகே ரேசன் கடையை இடமாற்றம் செய்ய மக்கள் எதிர்ப்பு

**விருதுநகர் ஏப்.28.**

சாத்தூர் அருகே சின்னக் கொல்லபட்டியில் தெற்கூரில் இருந்து ரேஷன் கடையை சின்ன கொல்லம்பட்டிக்கு இடம் மாற்றம் செய்ய பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

தெற்குரில் ரேஷன் கடை இருந்த கட்டிடம் சேதமடைந்ததை தொடர்ந்து சின்ன கொல்லம்பட்டியில் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. நேற்று முன்தினம் புதிய கட்டிடத்தில் ரேஷன் கடை செயல்படுத்த துவங்கியது.

தாங்கள் நீண்ட தூரம் சென்று பொருள்கள் வாங்க முடியாது ரேஷன் கடையை இடமாற்றம் செய்யக் கூடாது எனக் கூறி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தை தெற்கூர் மக்கள் முற்றுகையிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் பொதுமக்களை சமரசம் செய்து அனுப்பி வைத்தனர்.

## எல்ஜி அதன் புதிய ஆயில்-லூப்ரிகேட்டட் ஸ்க்ரூ ஏர் கம்பிரஸர்களை ஈஜி சூப்பர் பிரீமியம் வரம்பை அறிமுகம் செய்துள்ளது

**சேலம், ஏப். 28-**

உலகின் முன்னணி ஏர் கம்பிரஸர் உற்பத்தியாளர்களில் ஒன்றான *Elgi Equipments (BSE: 522074 NSE: ELGIEQUIP),* அதன் 'ஈஜிஎஸ்பி (சூப்பர் ப்ரீமியம்) வரம்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஆயில்-லூப்ரிகேட்டட் ஸ்க்ரூ ஏர் கம்பிரஸர்களை உள்ளடக்கிய புகழ்பெற்ற ஈஜி சீரிஸ் போர்ட்ஃபோலியோவில் ஒரு புதிய மேம்பாடாகும். இந்த இயந்திரங்கள் கம்பிரஸ்டு ஏர் தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்துகின்றன. வாடிக்கையாளர்களுக்கு 15% *வரை குறிப்பிடத்தக்க ஆற்றல் திறன் ஆதாயங்கள், வகையினத்தின் சிறந்த உத்தரவாதம் மற்றும் செயல்திறன், 90-110kW கம்பிரஸர் வரம்பில் குறைவான வாழ்க்கை சுழற்சி செலவுகள் ஆகியவற்றை வழங்குகிறது. இது குறித்து எல்ஜி *Equipments* லிமிடெட்டின், ஐஎஸ்ஏஏஎம்இ (இந்தியா, தெற்காசியா, ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு) மற்றும் எஸ்இஏ (தென் கிழக்கு ஆசியா), தலைவர் பாவேஷ் கரியா கூறுகையில், எல்ஜி இல், எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான உறுதியான செயல்திறன் ஆதாயங்களுடன் தொழில்நுட்ப முன்னேற்றத்தை சீரமைப்பதில் நாங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளோம்.

ஈஜி சூப்பர் பிரீமியத்துடன், கம்பிரஸ்டு ஏர் தொழில்நுட்பத்தில் செயல்திறன் மற்றும் புதிய வரையறைகளை அமைக்கும் அதே வேளையில், உயர்ந்த செயல்திறனை வழங்குவதற்கான எங்கள் தேடலில் நாங்கள் முன்னேறி உள்ளோம். ஒரு கம்பிரஸரின் மொத்த வாழ்க்கைச் சுழற்சி செலவில் 80% க்கும் அதிகமானவை ஆற்றல் செலவுகள் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றுக்கு காரணம் என்பதை உணர்ந்து ஈஜி சூப்பர் பிரீமியம் கம்பிரஸர்கள் ஆற்றல் திறனில் 15% வரை ஈர்க்கக்கூடிய ஊக்கத்தை அளிக்கின்றன. இந்த அதிநவீன யூனிட்டுகள் தங்கள் புதுமையான அம்சங்களின் மூலம் கணிசமான ஆற்றல் சேமிப்பிற்கு உறுதியளிக்கின்றன என்று கூறினார். ஒவ்வொரு ஈஜி சூப்பர் பிரீமியம் கம்பிரஸரும் ஏர் எண்டிற்கு 6 ஆண்டுகள், முக்கியமான பாகங்களுக்கு 3 ஆண்டுகள் மற்றும் பேக்கேஜில் ஒரு வருடம் மற்றும் ஏர் எண்டிற்கு ஜி10* ஆண்டுகள் மற்றும் பேக்கேஜிற்கு 5*ஆண்டுகள் நீட்டிக்கப்பட்ட உத்தரவாதத்துடன் வருகிறது. எல்ஜி ஈஜி சூப்பர் பிரீமியம் நீண்ட ஆயுள், நம்பகத்தன்மை மற்றும் நீடிப்புத் தன்மையை உறுதி செய்திடும் வகையில் கட்டமைக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன.

# தீ விபத்தில் வடமாநில தொழிலாளி உயிரிழப்பு

**விருதுநகர், ஏப். 28-**

சத்தீஸ்கர் மாநில காண்கர் மாவட்டத்தைச் சேர்ந்த சுனில் குமார் துக்கா 16 , இவர் கர்நாடகா போர்வெல் லாரியில் கிளீனர் ஆக வேலை செய்து வருகிறார். சம்பவத்தன்று மதியம் 12 மணிக்கு விருதுநகர் புல்லலக்கோட்டை ரோடு அருகே போர் போட்டு முடித்த பின் அந்தப் போர்வெலில் இருந்த பைப்பை அறுத்து அதை வாட்டி மடக்குவதற்காக இரும்பு கம்பியில் துணியைச் சுற்றி டீசல ஊற்றி நெருப்பை பற்ற வைத்தார். அப்போது பைப்பை தியால் வாட்ட முயற்சித்தார். அப்போது டீசல் எதிர்பார விதமாக சுனில் குமார் துர்கா உடல் மீது விழுந்து திடீரென தீ பிடித்தது. உடனடியாக அருகில் இருந்த சலீம், சதீஷ்குமார், காளிதாஸ் ஆகியோர் நெருப்பை அணைத்தனர். படுகாயம் அடைந்த சுனில் குமார் துர்கா அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் ஏப்ரல் 28 இல் சிகிச்சை பலனின்றி ஈரோடு தனியார் மருத்துவமனையில் இறந்தார். இது குறித்து விருதுநகர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சூரியனில் இருந்து தப்பிக்கவும் துபாயில் கோடைகாலத்திற்கான சிறந்த உட்புற சாகசங்கள்

**சென்னை, ஏப் 28-**

வெப்பமான கோடை சூரியன் பிரகாசிக்கும்போது, துபாய் உட்புற அதிசயங்களின் சரணாலயத்துடன் அழைக்கிறது. சாகசத்தின் சமரசம் செய்யாமல் வெப்பத்திலிருந்து தப்பிக்க உறுதியளிக்கிறது பிரமிக்க வைக்கும் ஈர்ப்புகள் முதல் கலாசார ஆய்வுகள் மற்றும் இடையில் உள்ள அனைத்தும், துபாய் உங்களை பொழுதுபோக்கு, அறிவொளி மற்றும் வசதியாக குளிர்ச்சியாக வைத்திருக்க ஏராளமான உட்புற நடவடிக்கைகளை வழங்குகிறது. நீங்கள் ஒரு சிலிர்ப்பைத் தேடுபவராகவோ, கலாச்சார ஆர்வலராகவோ அல்லது நிதானமான பயணியாகவோ இருந்தாலும், துபாயில் அனைவருக்கும் அசாதாரணமான ஒன்று உள்ளது.பசுமை கிரகத்தில் நகர்ப்புற காடடில் நுழையவும்.

பசுமை கிரகத்தில் துபாயின் மையத்தில் உள்ள பசுமையான, வெப்பமண்டல மழைக்காடுகளுக்குள் அடியெடுத்து வைக்கவும். இந்த பயோ-டோம் 3,000 க்கும் மேற்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தாயகமாக உள்ளது.பார்வையாளர்களுக்கு இயற்கையின் அதிசயங்களில் தங்களை மூழ்கடிக்க ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. துபாய் டால்பினாரியத்தில் டால்பின்களின் மந்திரத்தை நெருக்கமாக அனுபவிக்கவும். இந்த புத்திசாலித்தனமான உயிரினங்கள் தங்கள் அக்ரோபாட்டிக் ஸ்டண்ட்கள் மற்றும் விளை யாட்டுத்த னமான செயல்களால் உங்களை திகைக்க வைப்பதைப் பாருங்கள். இது முழு குடும்பத்திற்கும் மறக்க முடியாத உடபுற சாகசமாக அமைகிறது.

# நத்தம் அருகே வேன் மோதி மூதாட்டி பலி

**நத்தம், ஏப். 28-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சிறுகுடியை சேர்ந்தவர் ராசு (75). இவரது மனைவி பூமணி (73) இவர் நேற்று சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே உறவினர் வீட்டு துக்கத்திற்கு சென்று விட்டு பேருந்தில் சமுத்திராபட்டியில் இறங்கினார். பின்னர் சிறுகுடி செல்ல சாலையை கடக்க முயன்றார். அப்போது நத்தத்தில் இருந்து கொட்டாம்பட்டி நோக்கி சென்ற சுற்றுலா வேன் அவர் மீது மோதியது.இதில் தூக்கி வீசப்பட்ட அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



மதுரை மாநகர் மேற்கு 6-ம் பகுதி அ.தி.மு.க.சார்பில் பகுதி செயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன் தலைமையில் கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க விளாங்குடி பஸ்நிலையம் அருகில் வட்ட செயலாளர் கறிக்கடை மலைச்சாமி ஏற்பாட்டில் நீர்,மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்து மக்களுக்கு வழங்கினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார்,கு.திரவியம்,கணேஷ்பிரபு,வி.பி.ஆர்.செல்வகுமார்,கவுன்சிலர்நாகஜோதிசித்தன், வட்ட செயலாளர்கள் பி.என்.சுந்தர்ராஜன், கேசவன், கூடல்நகர் விஜயகுமார், நாராயணன், ஜஸ்டின்ராஜா மற்றும் 1-வது வார்டு அ.தி.மு.க.நிர்வாகிகள் உள்ளனர்.

# திருமங்கலம் பகுதியில் நிலவிடும் கடும் வறட்சி: கண்மாய்கள் வறண்டதால் விவசாயிகள் அதிர்ச்சி

**திருமங்கலம், ஏப். 28-**

கோடை வெயில் கொளுத்தி வரும் நிலையில் மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதியில் உள்ள கண்மாய்கள் அனைத்தும் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுவதால் விவசாயிகளும், பொதுமக்களும் அதிர்ச்சியடைந் துள்ளனர்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் பகுதியில் 42 பொதுப்பணித்துறை பராமரிப்பு கண்மாய்களும், 18 யூனியன் பராமரிப்பு கண்மாய்களும் உள்ளது. இதில் அம்மாபட்டி, புலியூர், சாத்தங்குடி உள்ளிட்ட கண்மாய்களில் எப்போதுமே தண்ணீர் இருப்பு இருப்பது வழக்கம். இதே போல் திருமங்கலம் பகுதியில் மழைகாலத்தில் விரைவாக நிரம்பிடும் கண்மாய்களான அம்மாபட்டி மற்றும் புலியூர் கண்மாய்கள் இந்தாண்டு கொளுத்திடும் கோடை வெயிலால் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் தண்ணீரின்றி கட்டாந்தரையாக காணப்படுகிறது. மேலும் முக்கிய கண்மாய்களான உரப்பனூர், சிவரக்கோட்டை, கள்ளிக்குடி, வில்லூர், வடகரை, சித்தூர் உள்ளிட்ட பல்வேறு கண்மாய்கள் தண்ணீர் இன்றி வறண்டு கிடப்பதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். இதனால் திருமங்கலம் பகுதி விவசாயிகளின் வாழ்வாதரம் பாதிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது.

குறிப்பாக திருமங்கலம் பிரதான கால்வாய் இணைப்பில் உள்ள உரப்பனூர் கண்மாய் நீரை நம்பி பல ஏக்கரில் சாகுபடி செய்துள்ள அப்பகுதி விவசாயிகளுக்கு தற்போது தண்ணீர் இல்லாத நிலை அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. இதனிடையே இந்த ஆண்டு வரலாறு காணாத வகையில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் கண்மாய்களின் பெரும்பாலான பகுதிகள் பாளம், பாளமாக வெடித்து வறட்சியை வெளிக்காட்டி வருகிறது. இதனால் கிராமப் பகுதிகளில் கோடை கால குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை காணப்படுகிறது.

மொத்தத்தில் திருமங்கலம் பகுதியில் அமைந்துள்ள அனைத்து கண்மாய்களும் இந்தாண்டு கோடை காலத்தில் முழுமையாக வறண்டுள்ள நிகழ்வு பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# மல்லாங்கிணறு பகுதியில் ரேசன் கடையில் மண்ணெண்ணெய் வழங்காததால் மக்கள் பாதிப்பு

**விருதுநகர், ஏப். 28-**

மல்லாங்கிணறு பகுதியில் ஏப்ரல் மாதத்திற்கான மண்ணெண்ணெய் இது வரை ரேஷனில் வழங்காததால் மக்கள் சிரமப்படுகின்றனர். மல்லாங்கிணர் பகுதியில் 12 ரேஷன் கடைகளில் 8,500 க்கு மேற்பட்ட ரேஷன் கார்டுகள் உள்ளன. ரேஷன் கடையில் அரிசி, சீனி, கோதுமை, மண்ணெண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்தது.

ஏப்ரல் மாதத்திற்கான அரசி, சீனி, கோதுமை உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்ட நிலையில் மண்ணெண்ணெய் மட்டும் இது வரை வழங்கப்படவில்லை. எப்போதும் 15 தேதிக்குள் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு விடும். ஆனால் இன்று வரை வழங்கப்படவில்லை. ஆயிரத்திற்கு 1,300 ரேஷன் கார்டு உள்ள கடைக்கு 64 லிட்டர், 970 காடுகள் உள்ள கடைக்கு 48 லிட்டர் மண்ணெண்ணெய் சப்பளை செய்யப்படும் என தெரிவித்ததால், விற்பனையாளர்கள் மண்ணெண்ணெய் எடுக்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

மல்லாங்கிணறு பகுதியில் பெரும்பாலான மக்கள் கிராமங்களை வசிப்பதனால், அதிக அளவில் மண்ணெண்ணையை பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய தட்டுப்பாடு காரணமாக மக்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர்.

வட்ட வழங்கல் அலுவலர் விஜயலட்சுமி கூறியதாவது. குடோன்களுக்கு மண்ணெண்ணெய் வரத்து பற்றாக்குறையாக உள்ளது. அனைத்து கடைகளுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த மாதம் வேற வழியில்லை . இருப்பதைக் கொண்டு வழங்கப்பட்டு வருகிறது. அடுத்த மாதத்தில் இருந்து சீராக மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

# தேனி வீரபாண்டி கோயிலில் உண்டியல் வசூல் ரூ.13.04 லட்சம்

**தேனி, ஏப். 28-**

தேனி அருகே வீரபாண்டியில் உள்ள கவுமாரியம்மன் கோயிலில் நடந்த உண்டியல் காணிக்கை எண்ணிக்கையின் முடிவில் ரொக்கமாக ரூ.13 லட்சத்து 4 ஆயிரத்து 350 கிடைத்தது.

தேனி அருகே வீரபாண்டியில் பிரசித்தி பெற்ற கவுமாரியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் 8 நாட்கள் திருவிழா நடைபெறும். இத்திருவிழாவில் தேனி மட்டுமல்லாது பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் 10 லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம். இத்தகைய சிறப்பு வாய்ந்த கோயிலில் ஆண்டுமுழுவதும் பக்தர்கள் கூட்டம் நிறைந்திருக்கும். இதனால் கோயில் வளாகத்தில் 14 நிரந்தர உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான சித்திரை திருவிழா வரும் மே மாதம் 7-ம் தேதியில் துவங்கி மே 14-ம் தேதி வரை நடைபெறஉள்ளது. திருவிழாவிற்கான கம்பம் நடுதல் விழா கடந்த 17-ம் தேதி நடந்தது. இதை தொடர்ந்து கம்பத்திற்கு பக்தர்கள் தினமும் தண்ணீர் ஊற்றி வருகின்றனர். மேலும், பக்தர்கள் நாள்தோறும் வந்து ஆயிரம் கண் பானை எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல் உள்ளிட்ட நேர்த்திக்கடன்களை செலுத்தி வருகின்றனர். மே 7-ம் தேதி திருவிழா துவங்குவதையடுத்து கோயில் வளாகத்தில் உள்ள 14 நிரந்தர உண்டியல்கள் எண்ணும் பணி கோயில் வளாகத்தில் நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அன்னக்கொடி தலைமை வகித்தார். கோயில் செயல் அலுவலர் மாரிமுத்து, இந்து அறநிலையத்துறை ஆய்வாளர் தியாகராஜன் முன்னிலை வகித்தனர். வீரபாண்டி சவுராஷ்ட்ரா கல்வியியல் கல்லூரி மாணவிகள் உண்டியல்களில் இருந்த காணிக்கைகளை எண்ணும் பணியில் ஈடுபட்டனர். உண்டியல் எண்ணும் பணி முடிந்த நிலையில் உண்டியலில் ரூ.13 லட்சத்து 4 ஆயிரத்து 350 ரொக்கப்பணமும், 20 கிராம் தங்கமும், 237 கிராம் வெள்ளியும் இருந்தது. உண்டியல் எண்ணும் பணிக்கான ஏற்பாடுகளை கோயில் மேலாளர் பாலசுப்பிரமணியன், கணக்காளர் பழனியப்பன் ஆகியோர் செய்தனர். தற்போது நிரந்தர உண்டியல்கள் எண்ணிக்கை முடிவடைந்ததையடுத்து சித்திரை திருவிழாவை யொட்டி 14 நிரந்தர உண்டியல்களுடன் கூடுதலாக 22 தற்காலிக உண்டியல்களும் வைக்கப்பட உள்ளன என்பது குறிப்படத்தக்கது.

# நத்தத்தில் கஞ்சா விற்றவர் கைது

**நத்தம், ஏப். 28-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அவுட்டர் பகுதியில் கஞ்சா விற்பனை நடப்பதாக நத்தம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.அதன் பேரில் அந்த பகுதியில் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி உள்ளிட்ட போலீசார்கள் ரோந்து சென்றனர். அப்போது செந்துறை பிரிவு சாலையில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த சிறுகுடி-மேற்குத்தெருவை சேர்ந்த மூக்கையா (38)என்பவரை போலீசார் கைது செய்தனர்.

தொடர்ந்து அவரிடம் இருந்து 300 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

### உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில்

# 3 தங்கம் வென்றது இந்தியா: இறுதிக்கு முன்னேறினார் சுரேகா

**ஷாங்காய், ஏப். 28-**

உலகக் கோப்பை வில்வித்தை போட்டியில் காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியா மூன்று தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளது. மகளிர் தனிநபர் பிரிவில் இறுதிப்போட்டிக்கு முனேறியுள்ளார் ஜோதி சுரேகா.




**ஆண்கள் - மகளிர் அணி...**

சீனாவின் ஷாங்காய் நகரில் உலகக் கோப்பை வில்வித்தை போட்டி நடந்து வருகிறது. இதில் இந்திய அணிகள் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. ஜோதி சுரேகா, அதிதி ஸ்வாமி, பர்ணீத் கௌர் ஆகியோர் அடங்கிய மகளிர் அணி இத்தாலியை 236-225 என்ற புள்ளிகளில் வீழ்த்தி தங்கம் வென்றது. அபிஷேக் வர்மா, பிரயன்ஷ், பிரதமேஷ் ஆகிய மூவரும் அடங்கிய ஆண்கள் அணி நெதர்லாந்தினை 238-231 என்ற புள்ளிகளில் வீழ்த்தி தங்கம் வென்றது.

**காம்பவுண்ட் கலப்பு...**

காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் வர்மா/ ஜோதி சுரேகா கூட்டணி எஸ்டோனியாவை 158-157 புள்ளிகளில் வென்று தங்கம் வென்றனர். நடப்பு ஆசிய விளையாட்டு சாம்பியன் ஜோதிக்கு இது இரட்டை தங்கப் பதக்கமாகும். மேலும் அவர் தனிநபர் பிரிவிலும் அரையிறுதிப் போட்டியில் விளையாடவிருக்கிறார். கலப்பு பிரிவில் தனி நபர் பதக்கத்திற்கான வேட்டையிலும் பிரயன்ஷ் உள்ளார். ரீகர்வ் பதக்க சுற்றுகள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகின்றன. இதில் 2 தங்கங்களை இந்தியா எதிர்பார்க்கிறது.

**இறுதிக்கு தகுதி**

மகளிர் அணி, ஆடவர் அணி, காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் வர்மா/ஜோதி சுரேகா கூட்டணி 3 தங்கம் வென்றனர். இந்நிலையில், ஆந்திரத்தைச் சேர்ந்த ஜோதி சுரேகா ரீகர்வ் மகளிர் தனிநபர் பிரிவில் எஸ்டோனியாவின் மரிடா பாஸுடன் அரையிறுதியில் 149-147 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு தேர்வாகியுள்ளார்.

### ஐ.பி.எல். வரலாற்றிலேயே

# அதிகபட்ச ரன்களை சேஸ் செய்து புதிய சாதனை படைத்தது பஞ்சாப்

**கொல்கத்தா, ஏப். 28-**

ஐ.பி.எல். வரலாற்றிலேயே அதிகபட்ச ரன்களை சேஸ் செய்த அணி என்ற சாதனையை பஞ்சாப் அணி படைத்துள்ளது.

**42-வது லீக் ஆட்டம்...**

17-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. அந்த வகையில் வெள்ளிக்கிழமை கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் 42-வது லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பஞ்சாப் கிங்ஸ் அணியை எதிர்கொண்டது. இதில் டாஸ் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பேட்டிங் செய்ய தொடங்கியது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சுனில் நரேன் மற்றும் பிலிப் சால்ட் களம் இறங்கினார்.

**பிலிப் சால்ட் அதிரடி...**

பிலிப் சால்ட் 6 சிக்சர் 6 பவுண்டரியுடன் 37 பந்துகளில் 75 ரன்கள் குவித்தார். சுனில் நரைன் 4 சிக்சர் 9 பவுண்டரியுடன் 71 ரன்கள் சேர்த்தார். இருவரும் 10.2 ஓவர்களில் 138 ரன்கள் எடுத்தனர். அடுத்து களமிறங்கிய வெங்கடேஷ் ஐயர் 39 ரன்களும், ரஸல் 24 ரன்களும், கேப்டன் ஷ்ரேயாஸ் ஐயர் 28 ரன்களும் சேர்க்க 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த கொல்கத்தா அணி 261 ரன்கள் குவித்தது. பஞ்சாப் அணி தரப்பில் அர்ஷ்தீப் சிங் 2 விக்கெட்டுகளையும், ராகுல் சாஹர், சேம் கரன், ஹர்ஷல் படேல் ஆகியோர் தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனையடுத்து 262 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி பஞ்சாப் அணி வீரர்கள் களம் இறங்கினர்.

**சேஸ் செய்த அணிகள்:**

1. பஞ்சாப் கிங்ஸ் - 262 ரன்கள்.
2. தென் ஆப்பிரிக்கா - 259 ரன்கள்.
3. மிடில்செக்ஸ் - 253 ரன்கள்.

**ஜானி பார்ட்ஷோ...**

தொடக்க ஆட்டக்காரர்களாக பிரப்சிம்ரன் சிங் மற்றும் ஜானி பார்ட்ஷோ அதிரடியாக ஆடி பந்துகளை பவுண்ட்ரிகளுக்கும், சிக்ஸர்களுக்கும் விளாசினர். 20 பந்துகளுக்கு 54ரன்கள் எடுத்த நிலையில் பிரப்சிம்ரன் சிங் ரன் அவுட் ஆனார். இதனைத் தொடர்ந்து ஜானி பார்ட்ஷோவுடன் கை கோர்த்த ரிலே ரோஷோவும் 26ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். இதனைத் தொடர்ந்து களமிறங்கிய ஷஷாங் சிங் நல்ல பார்ட்னர்ஷிப்பை கொடுக்க அணியின் ரன் எண்ணிக்கை உயர்ந்தது.

**ஒரு போட்டியில் அதிக சிக்சர்கள்:**

1. கொல்கத்தா - பஞ்சாப் - 42 சிக்சர்கள்.
2. ஐதராபாத் - மும்பை/ பெங்களூரு - ஐதராபாத் - 38 சிக்சர்கள்.
3.பால்க் லெஜண்ட்ஸ் - காபூல் ஸ்வானன் - 37 சிக்சர்கள்.

**பஞ்சாப் சாதனை....**

ஜானி பார்ட்ஷோ மற்றும் ஷஷாங் சிங் அதிரடியாக விளையாடி ரன்களை சரமாரியாக உயர்த்தி 18.4 ஓவர்களிலேயே இலக்கை எட்டி வரலாற்று வெற்றி பெற்றுள்ளனர். இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றிலேயே அதிகபட்ச ரன்களை சேஸ் செய்த அணி என்ற சாதனை படைத்தது பஞ்சாப் அணி. ஜானி பிரட்ஷோ 48பந்துகளில் 108ரன்கள் குவித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

# பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெறுவோம்: பஞ்சாப் வீரர் ஷசாங்க் சிங் நம்பிக்கை

**கொல்கத்தா, ஏப். 28-**

ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் 68 ரன்கள் குவித்த ஷசாங்க் சிங், பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெறுவோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**முக்கியமான நேரத்தில்...**

ரசிகர்களை மகிழ்வித்து வரும் ஐ.பி.எல். தொடரின் 17-வது சீசனில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணியை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் அபார வெற்றி பெற்றது. இந்த வருடம் பஞ்சாப் அணிக்கு ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடி வரும் ஷசாங்க் சிங் இப்போட்டியில் முக்கியமான நேரத்தில் 2 பவுண்டரி 8 சிக்சருடன் 68 (28 பந்துகள்) ரன்கள் குவித்து அற்புதமான பினிஷிங் கொடுத்து வெற்றியில் முக்கிய பங்காற்றினார்.

**புத்துணர்ச்சியை...**

இந்நிலையில் தரமான சுனில் நரைனுக்கு எதிராக அடிக்கக்கூடாது என்று முடிவெடுத்ததாக தெரிவிக்கும் அவர் மற்ற பவுலர்களை வெளுத்து வாங்கியதாக கூறியுள்ளார். அத்துடன் இங்கிலாந்துக்காக 100 போட்டிகளில் விளையாடிய ஜானி பேர்ஸ்டோ போன்றவர் தம்மை பாராட்டியது புத்துணர்ச்சியை கொடுத்ததாகவும் தெரிவிக்கும் ஷசாங்க் சிங் இப்போதும் பஞ்சாப் பிளே ஆப் சுற்றுக்கு செல்லும் என்ற நம்பிக்கையுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

**முயற்சித்தேன்...**

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு:- “பெவிலியனில் இருக்கும்போது பிட்ச் எப்படி இருக்கிறது என்பதை பார்த்தேன். அதில் நல்ல உயரத்துடன் பந்து வருவதாக உணர்ந்தேன். சுனில் நரைனுக்கு எதிராக நாங்கள் சிங்கிள், டபுள் ரன்கள் மட்டும் எடுத்ததில் மகிழ்ச்சி. அதற்கு பதிலாக மற்ற பவுலர்களை அடிக்க முயற்சித்தேன். பயிற்சியாளர் ட்ரேவர் பெய்லிஸ் எனக்கு நான் விரும்பும் வழியில் விளையாடுமாறு முழு சுதந்திரத்தை கொடுத்துள்ளார். எதிர்ப்புறம் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனுபவத்தை கொண்ட ஜானி பேர்ஸ்டோ போன்றவர் உங்களுக்கு கை தட்டினால் அது உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். இன்னும் எங்களுக்கு 5 போட்டிகள் இருக்கிறது. எனவே இப்போதும் எங்களால் பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்று கூறினார்.

**தோல்வி குறித்து...**

இந்நிலையில் இந்த போட்டி முடிந்து தாங்கள் அடைந்த தோல்வி குறித்து பேசிய கொல்கத்தா அணியின் கேப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் கூறுகையில்., 260 ரன்கள் என்பது வெற்றிக்கு போதுமான ரன்கள்தான். இந்த போட்டியில் எங்களது அணியின் பேட்ஸ்மேன்கள் சிறப்பாக விளையாடினர். அதிலும் சுனில் நரைன் மற்றும் சால்ட் ஆகியோர் பேட்டிங் செய்ததை பார்க்க அற்புதமாக இருந்தது.இந்த போட்டியில் 2 அணிகளின் வீரர்களும் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். இந்த போட்டியில் நாங்கள் 260 ரன்கள் குவித்தும் தோல்வியை சந்தித்துள்ளது வருத்தமாக உள்ளது. தப்பு எங்கு நடந்தது என்பதே எனக்கு தெரியவில்லை. இருப்பினும் இது போன்ற முடிவுகளும் கிடைக்கும் என்பதை மனதில் வைத்து அதற்கு ஏற்றாற் போன்று தயாராக விரும்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## சிறப்பு ரெயில்கள் இயக்கம்

சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் திடலில் இன்று (ஏப். 28) ஐபிஎல் போட்டி நடைபெற உள்ளது. இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி பலப்பரிட்சை நடத்த உள்ளது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் ஏராளமான கிரிக்கெட் ரசிகர்கள் ஐபிஎல் போட்டியைக் காணச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து ஐபிஎல் போட்டியைக் காண வரும் ரசிகர்களின் வசதிக்காக வேளச்சேரியிலிருந்து இரவு 10.40, 11.05 மணிக்கும், சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து இரவு 11.20, 11.45 மணிக்கும் புறநகர் மின்சார ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

## வைரலான அஸ்வின் பதிவு

கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் 262 ரன்களை அசால்டாக சேசிங் செய்துள்ள பஞ்சாப் அணியை பார்த்து மிரண்டு போயுள்ள ரவிச்சந்திரன் அஸ்வின் பவுலர்களை காப்பாற்றுமாறு கோரிக்கை வைத்துள்ளார். ஏற்கனவே இந்த வருடம் ஐதராபாத் அணி 287 ரன்கள் அடித்ததை போல பெரும்பாலான போட்டிகளில் அனைத்து அணிகளும் எளிதாக 200 - 250 ரன்கள் அடித்து வருகின்றன.

எனவே இப்படியே போனால் பவுலர்கள் அழிந்து விடுவார்கள் என்ற வகையில் தெரிவிக்கும் அஸ்வின், தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது பின்வருமாறு., “யாராவது பவுலர்களை காப்பாற்றுங்கள் ப்ளீஸ். 260+ ரன்கள் அடிக்கப்பட்ட போட்டியில் கடைசி 2 ஓவர்களில் பந்துகளுக்கு சமமான ரன்கள் மட்டுமே தேவைப்பட்டது. இது மூழ்கட்டும்'' என்று பதிவிட்டுள்ளார். இந்த பதிவு தற்போது வைரலாகி வருகிறது.

## கிரிக்கெட் குறித்து சாம் கரண்

கொல்கத்தாவுக்கு எதிராக அபார வெற்றி பெற்ற பஞ்சாப் அணியின் கேப்டன் நெகிழ்ச்சியாக பேசியுள்ளார். வெற்றி குறித்து பஞ்சாப் அணியின் கேப்டன் சாம் கரண் கூறியதாவது., மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. முக்கியமாக வெற்றி பெற்றுள்ளோம். கிரிக்கெட் பேஸ்பாலாக மாறிவருகிறது. எங்களுக்கு கடந்த சில வாரம் கடினமான நாள்களாக இருந்தன. ஆனால் தாக்குப்பிடித்திருந்தோம்.

வீரர்களின் பயிற்சியும் பயிற்சியாளர்களின் நம்பிக்கையும் வீண்போகவில்லை. சிறிய ஆடுகளம்; ஈரப்பதம் வேறு இருப்பதால் சிக்ஸர் அடிக்க எளிதாக இருந்தது. ஜானி பேர்ஸ்டோ அற்புதமான ஆட்டம். சஷாங் சிங் இந்தத் தொடரின் சிறந்த கண்டுபிடிப்பு எனலாம்; ஆஷ்டதோஷு்யும் இதில் சேர்க்கலாம். எங்களது வீரர்களை நினைத்து பெருமையாக இருக்கிறது. பேஸ்பால் என்ற வார்த்தை இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக மெக்குல்லம் சேர்ந்த பிறகு இங்கிலாந்து அணியின் அதிரடி ஆட்டத்தினால் உருவானதாகும்.

## ஹர்பஜனின் இந்திய டி-20 அணி

9-வது 20 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் ஜூன் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த தொடரில் பங்கேற்க உள்ள ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணியில் நடப்பு ஐ.பி.எல். சீசனில் சிறப்பாக செயல்படும் வீரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இந்நிலையில் எதிர்வரும் டி20 உலகக்கோப்பை தொடரை முன்னிட்டு அந்த தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற வேண்டிய வீரர்கள் குறித்து பல இந்திய முன்னாள் வீரர்கள் தங்களது கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் இந்திய முன்னாள் வீரரான ஹர்பஜன் சிங், தான் தேர்வ்வு செய்துள்ள 15 வீரர்கள் கொண்ட இந்திய அணியை அறிவித்துள்ளார். ஹர்பஜன் சிங் அணி விவரம் பின்வருமாறு:- ரோகித் சர்மா (கேப்டன்), ஜெய்ஸ்வால், விராட் கோலி, சூர்யகுமார் யாதவ், ரிஷப் பண்ட், ரிங்கு சிங், சஞ்சு சாம்சன், ஷிவம் துபே, ஜடேஜா, சாஹல், குல்தீப் யாதவ், பும்ரா, ஆவேஷ் கான், அர்ஷ்தீப் சிங் மற்றும் மயங்க் யாதவ்.

## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி

சென்னை சூப்பர் கிங்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் தோல்வியை தழுவியது. இந்த போட்டியில் சி.எஸ்.கே அணி தோல்வியை சந்திக்க காரணம் கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட்டின் சில தவறான முடிவுகள்தான் என்று பலரும் கூறியிருந்தனர். அதேவேளையில் சென்னை பெற்ற இந்த தோல்விக்கு டோனி மற்றும் ருதுராஜ் கெய்க்வாட்தான் காரணம் என இந்திய முன்னாள் வீரர் நவ்ஜோத் சிங் சித்து கூறியிருந்தார். இவ்வாறு நவ்ஜோத் சிங் சித்து கூறிய கருத்துகளை முன்னாள் சி.எஸ்.கே வீரரான அம்பத்தி ராயுடு தெரிவித்ததாக சில வதந்திகள் சமூக வலைதளத்தில் பரவின. அதனை கண்ட ரசிகர்கள் டோனி மற்றும் ருதுராஜ் கெய்க்வாட்டை எவ்வாறு மோசமாக பேசலாம் என ராயுடுவின் மீது அதிருப்தி அடைந்தனர்.

அதனால் ரசிகர்கள் மத்தியில் இது பரபரப்பாக மாறியது. இந்நிலையில் இந்த விவாகரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தற்போது அம்பத்தி ராயுடு விளக்கம் ஒன்றினை அளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “நான் லக்னோ அணிக்கெதிரான போட்டி நடைபெற்றபோது வர்ணனை செய்யவே இல்லை. என்னுடைய பண்ணை தோப்பில் மாம்பழங்களை பறித்து கொண்டிருந்தேன். அப்படி இருக்கையில் நான் எப்படி அவர்களை பற்றி தவறாக பேசியிருக்க முடியும். முதலில் இதுபோன்ற தவறான செய்திகளை பகிரும் முன்னர் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மேலும் இதுபோன்ற தகவல்களை பரப்ப வேண்டாம்'' என்று இந்த விவாகரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

## படகு வீராங்கனைக்கு வாழ்த்து



வரும் ஜூலை மாதம் நடைபெற உள்ள பாரிஸ் ஒலிம்பிக்கில் பாய்மர படகு போட்டியில் கலந்து கொள்வதற்கு தமிழக வீராங்கனை நேத்ரா குமணன் தகுதி பெற்றுள்ளார். பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியா சார்பில் பாய்மர படகு போட்டியில் பங்கேற்கும் 2-வது போட்டியாளராக நேத்ரா தகுதி பெற்றுள்ளார். பிரான்ஸ் நாட்டின் ஹையரெஸில் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதி சுற்றுக்கான இறுதி வாய்ப்பில் நேத்ரா குமணன் பங்கேற்று இந்த வாய்ப்பை உறுதி செய்துள்ளார்.

இந்த பாய்மர படகு போட்டியில் 67 புள்ளிகள் பெற்று டாப் 5-ல் ஒருவராக நேத்ரா தகுதி பெற்றுள்ளார். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலும் நேத்ரா குமணன் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நேத்ரா குமணனை வாழ்த்தி தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் வெளியிட்டுள்ள பதிவில், “தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ELITE திட்ட வீராங்கனையான தங்கை நேத்ரா குமணன், பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கான தகுதிச்சுற்றில் வெற்றி பெற்று, 2-ஆவது முறையாக இந்தியா சார்பில் ஒலிம்பிக் படகுப்போட்டியில் களம் காணவுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு என் பாராட்டுகள் என்று தெரிவித்துள்ளார்.

### நீர்த்தேக்கங்களில் தொடர்ந்து சரியும் நீர்மட்டம்:

# தென் மாநிலங்களில் விவசாயம், குடிநீருக்கு பிரச்சினை ஏற்படும்

### மத்திய நீர் ஆணையம் எச்சரிக்கை

**புதுடில்லி, ஏப். 28-**

தென் மாநிலங்களில் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் சரிந்து வருவதாக தெரிவித்துள்ள மத்திய நீர் ஆணையம், குடிநீர், விவசாயம் உள்ளிட்டவற்றிற்கு சிக்கல் ஏற்படலாம் என எச்சரித்து உள்ளது.

இது தொடர்பாக மத்திய நீர் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: கடும் வெயில் காரணமாக தமிழகம், ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளாவில் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் கடுமையாக சரிந்து வருகிறது. தென் மாநிலங்களில் 42 நீர்தேக்கங்களை கண்காணித்து வருகிறோம். அங்கு 53.334 பில்லியன் கியூபிக் மீட்டர்(பிசிஎம்) அளவு தண்ணீர் தேக்க முடியும். ஆனால், தற்போது அங்கு 8.865 பிசிஎம் அளவு(17 சதவீதம்) தண்ணீர் மட்டுமே உள்ளது. கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 29 சதவீதம் அளவுக்கு தண்ணீர் இருந்தது. இது அம்மாநிலங்களில் கடுமையான நீர்ப்பற்றாக்குறையை ஏற்படுத்துவதுடன், குடிநீர், விவசாயம், மின்சார உற்பத்தி செய்வதில் கடுமையான சவால்களை ஏற்படுத்தும்.

இதற்கு மாறாக அசாம்,ஒடிசா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் நீர் இருப்பு கடந்த 10 ஆண்டுகளை விட அதிகரித்து உள்ளது. இந்த மாநிலங்களில் 23 நீர்த்தேக்கங்களில் 20.430 பிசிஎம் தண்ணீர் தேக்க முடியும். தற்போது 7.889 பிசிஎம் தண்ணீர் உள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் மத்திய நீர் ஆணையம் கூறியுள்ளது.

### சட்டப்பேரவை தேர்தலுக்கான

# தேர்தல் அறிக்கை வெளியிட்டார் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன்

**ஐதராபாத், ஏப். 28-**

ஆந்திராவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஆளும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை அம்மாநில முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி நேற்று (ஏப். 27) வெளியிட்டார்.

'நவரத்னலு' என்ற பெயரில் கடந்த 2019ஆம் ஆண்டு ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருந்த நிலையில், அதில் சிறு சிறு மாற்றங்கள் செய்யப்பட்டு இம்முறை 'நவரத்னலு ப்ளஸ்' என்ற பெயரில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் முக்கிய வாக்குறுதிகளாக, விவசாயிகளுக்கான வருடாந்திர நிதியுதவியாக வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ. 13500த்திலிருந்து ரூ. 16000 ஆக உயர்த்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிர்களுக்கான வட்டியில்லா கடன் வரம்பு ரூ. 1 லட்சத்திலிருந்து ரூ. 3 லட்சமாக அதிகரிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான ‘அம்மா வோடி’ திட்டப் பெண் பயனாளிகளுக்கான ஊக்கத்தொகை ரூ. 15000த்திலிருந்து ரூ. 17000 ஆக உயர்த்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 45 - 60 வயது வரையிலான பெண் பயனாளிகளுக்கான 'ஒய்எஸ்ஆர் சேயுதா' நிதியுதவித் திட்டம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ. 3000 ஆக வழங்கப்பட்டு வந்த நல ஓய்வூதியத் தொகை ரூ. 3500 ஆக உயர்த்தி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆந்திர பிரதேசத்தில் அமராவதியை போல, விசாகப்பட்டினம், கர்நூல் ஆகிய நகரங்களையும் சேர்த்து மொத்தம் 3 தலைநகரங்கள் உருவாக்கப்படுமென மீண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாற்றாந்தாய் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது:

# மத்திய பா.ஜ.க. அரசு மீது செல்வப்பெருந்தகை தாக்கு

**சென்னை, ஏப். 28-**

பா.ஜ.க. அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். மேலும், பா.ஜ.க. ஆட்சியில் அனைத்து நிலைகளிலும் நிதி ஒதுக்குவதில் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் அனைத்து நிலைகளிலும் நிதி ஒதுக்குவதில் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு வருகிறது. தென்மாநிலங்களிடையே குறிப்பாக தமிழ்நாட்டிற்கு கடுமையான பாரபட்சத்துடன் நிதி ஒதுக்கப்பட்டு வருவதை எதிர்த்து கடுமையான கண்டனங்களை வெளிப்படுத்தியிருக்கிறோம்.

கடந்த டிசம்பர் 2023 இல் மிக்ஜம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கடுமையான வெள்ள பாதிப்புக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.38,000 கோடி நிதி ஒதுக்க தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்தது. முன்னாள் மத்திய மந்திரி டி.ஆர். பாலு தலைமையில் கடந்த ஜனவரி மாதம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து கோரிக்கை மனு வழங்கினார்கள்.

மத்திய குழு அறிக்கை வந்ததும் சில நாட்களில் நிதி ஒதுக்கப்படும் என்று உள்துறை மந்திரி கூறினார். ஆனால், அவர் கூறியபடி நிதி ஒதுக்கப்படவில்லை. நிதிமந்திரி நிர்மலா சீதாராமன் தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பிறகு தேசிய பேரிடராக இதனை அறிவிக்க முடியாது என்று கூறினார். இந்நிலையில் மத்திய உள்துறை அமைச்சகம் மிக்ஜம் புயல் நிவாரண நிதியாக ரூ.115.49 கோடியும், டிசம்பர் மாத வெள்ள நிவாரண நிதியாக ரூ.160.61 கோடியும் ஆக மொத்தம் ரூ.276.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ரூ.682.63 கோடி. இதில் மாநில பேரிடர் நிவாரண நிதியில் உள்ள இருப்பு தொகையான ரூ.406.57 கோடியை கழித்தது போக மீதியுள்ள தொகையான ரூ.276.10 கோடி தான் தற்போது தமிழ்நாட்டிற்கு உள்துறை அமைச்சகம் ஒதுக்கியுள்ளது. நாம் கேட்ட நிவாரண நிதி ரூ.38,000 கோடி. ஆனால், மாநில பேரிடர் நிவாரண நிதியில் ஏற்கனவே இருந்த 406.57 கோடியை விடுவித்து மீதியுள்ள ரூபாய் 276.10 கோடியை தான் தமிழ்நாட்டிற்கு நிவாரண நிதியாக மத்திய அரசு வழங்கியுள்ளது.

தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியை ஒதுக்காமல் மாநில பேரிடர் நிவாரண நிதியாக ஏற்கனவே இருக்கிற தொகையை கழித்து விட்டு மீதி தொகையை உள்துறை அமைச்சகம் ஒதுக்கியிருப்பது மத்திய பா.ஜ.க. அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் நாம் கேட்ட தொகையை ஒதுக்க மத்திய பா.ஜ.க. அரசு மறுத்தது தெளிவாக தெரிகிறது. இந்த ஒதுக்கீடு யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டது போல் இருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நிவாரண நிதி வழங்காத பிரதமர் மோடி தமிழக மக்களுக்காக பேசுவது அப்பட்டமாக நீலிக் கண்ணீர் வடிப்பதாகத் தான் கருத முடியும்.

தமிழக மக்கள் மீதோ, தமிழக வாழ்வாதாரத்தின் மீதோ கொஞ்சம் கூட கருணை காட்டாத அணுகுமுறையை தான் பிரதமர் மோடி கையாண்டு வருகிறார் என்பதற்கு உள்துறை அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீடு மேலும் உறுதி செய்கிறது. இத்தகைய வஞ்சிக்கிற மத்திய பா.ஜ.க. அரசின் நடவடிக்கையை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக வன்மையாக கண்டிக்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உரிமம் பெறாத பட்டாசு ஆலைகளுக்கு ரசாயன பொருள் எப்படி கிடைக்கிறது?

### ஐகோர்ட் மதுரை கிளை கேள்வி

**மதுரை, ஏப். 28-**

உரிமம் பெறாத பட்டாசு ஆலைகளுக்கு ரசாயன பொருட்கள் எப்படி கிடைக்கிறது? என மதுரை ஐகோர்ட் கிளை கேள்வி எழுப்பியுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் நிகழ்ந்த 2 பட்டாசு விபத்து சம்பவங்கள் தொடர்பாக முன்ஜாமீன் மற்றும் ஜாமீன் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மதுரை ஐகோர்ட் கிளையில் விசாரணைக்கு வந்தன. ஆமத்தூர், தாயில்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களில் வி.ஏ.ஓ.க்கள் மற்றும் போலீசாருக்கு தெரியாமல் உரிமம் பெறாத பட்டாசு ஆலைகள் இயங்கி வந்தது அதிர்ச்சி அளிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

சட்டவிரோத பட்டாசு ஆலைகளில் பயன்படுத்தப்படும் ரசாயனங்கள், வெடி மருந்துகள் ஆகியவை தவறான வழிகளிலும் பயன்படுத்தப்படலாம் என்றும் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர். மேலும் உரிமம் பெறாத பட்டாசு ஆலைகளுக்கு ரசாயன பொருட்கள் எப்படி கிடைக்கிறது? என்றும், மேற்கண்ட இரண்டு கிராமங்களின் வி.ஏ.ஓ.க்கள் கிராமங்களில்தான் வசிக்கிறார்களா? என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்றும் விசாரணை அதிகாரிக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். மேலும் வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மனுதாரர்களுக்கு ஜூன் 7-ந்தேதி வரை இடைக்கால ஜாமீன் மற்றும் முன்ஜாமீன் வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது:

# தமிழ்நாட்டை மத்திய அரசு வஞ்சிப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 28-

தமிழ்நாட்டிற்கு நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது என மத்திய பா.ஜ.க. அரசு வஞ்சிக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மிக்ஜாம் புயல், வெள்ள பாதிப்புகளுக்கு தேசிய பேரிட நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக்ஜாம் புயல் நிவாரண நிதியாக ரூ. 285 கோடி, கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுக்கு நிவாரண நிதியாக ரூ.397 கோடி வழங்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் முதற்கட்டமாக ரூ. 285 கோடி மிக்ஜாம் புயல் நிதியில் இருந்து ரூ. 115 கோடியும், ரூ. 397 கோடி வெள்ள பாதிப்பு நிதியில் இருந்து 160 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டிற்கு நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது என மத்திய பா.ஜ.க. அரசு வஞ்சிக்கிறது என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், மிக்ஜாம் புயல் மற்றும் வெள்ளப் பாதிப்புகளுக்கான நிவாரணமாகத் தமிழ்நாடு கோரியது 37,907 கோடி ரூபாய். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாகவும், உட்கட்டமைப்புகளை மறுசீரமைக்கவும் தமிழ்நாடு அரசு மாநிலப் பேரிடர் நிதியில் இருந்து இதுவரை செலவு செய்துள்ளது 2,477 கோடி ரூபாய். ஆனால், மத்திய பா.ஜ.க அரசு தற்போது அறிவித்திருப்பதோ வெறும் 276 கோடி ரூபாய். இதுவும் நாம் உச்சநீதிமன்றத்தை நாடிய பிறகே அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது என வஞ்சிக்கும் மத்திய பாஜக அரசின் ஒவ்வொரு செயலையும் நம் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் 'வெள்ளுடை வேந்தர்' சர். பிட்டி தியாகராயரின் 173-வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வைத்திநாதன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# வட தமிழ்நாட்டில் மே 2 தேதிக்கு பிறகு லேசான மழைக்கு வாய்ப்பு

## சென்னை வானிலை ஆய்வு மையம்

சென்னை, ஏப். 28-

தமிழகத்தில் வரும் 1-ம் தேதி வரை வறண்ட வானிலையே நிலவும் என தெரிவித்துள்ள சென்னை வானிலை ஆய்வு மையம், மே 2-ந் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், அதனை ஒட்டிய வட தமிழக உள் மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது:- குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வரும் 01.05.2024 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக் கூடும்.

02.05.2024: மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 03.05.2024: தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வரும் 01.05.2024 வரை: தமிழக உள் மாவட்டங்களில் அடுத்த ஐந்து தினங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும். வட தமிழக உள் மாவட்டங்களில் அடுத்த ஐந்து தினங்களில் அதிகபட்ச வெப்பநிலை 3 டிகிரி முதல் 5 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை வட தமிழக உள் மாவட்டங்களின் ஒருசில இடங்களில் 39 டிகிரி முதல் 42 டிகிரி செல்சியஸ், இதர தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் 35 டிகிரி முதல் 39 டிகிரி செல்சியஸ் இருக்கக்கூடும்.

அடுத்த ஐந்து தினங்களில் வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும். இதர தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது ஓரிரு இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 36 முதல் 37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 முதல் 28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க மதுரை மாநகர் மாவட்ட 71-வது வட்ட அ.தி.மு.க. சார்பில் அதன் வட்ட செயலாளர் பழங்காநத்தம் ராஜாராம் ஏற்பாட்டில் பழங்காநதத்தில் நீர்,மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார். அருகில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பரவை ராஜா, வி.பி.ஆர்.செல்வகுமார், கு.திரவியம், ஏ.பார்த்திபன், எஸ்.எம்.டி.ரவி, தங்கப்பாண்டி, வக்கீல் பாலமுருகன், சி.ஆர்.கதிரவன், ராஜா சீனிவாசன்,மாணவரணி விக்ரம் ஆகியோர் உள்ளனர்.

# உதவி பேராசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க மேலும் கால அவகாசம்

## ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை, ஏப். 28-

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் உள்ள 4,000 உதவி பேராசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் கலை கல்லூரி மற்றும் கலையியல் கல்லூரிகளில் உள்ள 4000 உதவி பேராசிரியர் பணியிடங்களை போட்டித் தேர்வுகள் மூலம் நிரப்புவதற்கான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் கடந்த மார்ச் மாதம் அறிவித்திருந்தது. அதன்படி கடந்த மார்ச் 28 ஆம் தேதி முதல் ஏப்ரல் 29 ஆம் தேதி வரை www.trb.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது. ஆகஸ்ட் 4 ஆம் தேதி தேர்வு நடைபெற உள்ள நிலையில் தற்போது விண்ணப்பிதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துள்ளதாவது;

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கான உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு போட்டித் தேர்வு மூலம் நேரடி நியமனம் செய்வதற்கு கடந்த மார்ச் 14 ஆம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் இணைய வழி வாயிலாக பெறப்பட்டு வருகிறது.

இந்நிலையில், விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு இணையவழி வாயிலாக விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி தேதி 29.04.2024 லிருந்து 15.05.2024 மாலை 5.00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது என அறிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளது.

# உறவினர் உடல்நலக்குறைவால் மரணம்:

# ஹேமந்த் சோரனுக்கு இடைக்கால ஜாமீன் வழங்க நீதிமன்றம் மறுப்பு

புதுடெல்லி, ஏப். 28-

மாமாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்க ஹேமந்த் சோரனுக்கு சிறப்பு நீதிமன்றம் இடைக்கால ஜாமீன் வழங்க மறுத்துவிட்டது.

முன்னதாக ஹேமந்த் சோரனின் மாமா, ராஜா ராம் சோரன் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார். இதையடுத்து அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள 13 நாட்கள் இடைக்கால ஜாமீன் கோரி சிறப்பு நீதிமன்றத்தில் ஹேமந்த் சோரன் தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால் அவரது கோரிக்கையை சிறப்பு நீதிமன்றம் நிராகரித்து விட்டது. ராஜா ராம் சோரன் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜே எம்எம்) தலைவர் ஷிபு சோரனின் மூத்த சகோதரர் ஆவார்.

நில மோசடியுடன் தொடர்புடைய சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கு தொடர்பாக, ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரனை அமலாக்கத் துறை கடந்த ஜனவரி 31-ஆம் தேதி கைது செய்தது. முன்னதாக, அவர் தனது முதல்வர் பதவியை ராஜிநாமா செய்தார். அவரது கட்சியின் மூத்த தலைவர் சம்பய் சோரன் ஜார்க்கண்ட் புதிய முதல்வராக பதவியேற்றார்.

முதல்வராக ஹேமந்த் சோரன் இருந்தபோது ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் 8.5 ஏக்கர் நிலத்தைப் பெற போலி ஆவணங்கள் தயாரித்து தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

அமலாக்கத்துறை விசாரணைக்குப் பிறகு அவர் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த கைது நடவடிக்கைக்கு எதிராக சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தலின் பேரில், ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் ஹேமந்த் சோரன் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீது கடந்த பிப்ரவரி 28-ஆம் தேதி இறுதி விசாரணை நடத்திய உயர்நீதிமன்றம், தீர்ப்பை ஒத்திவைத்தது. இந்த விவகாரத்தில் உயர்நீதிமன்றம் இதுவரை தீர்ப்பை வழங்காததைத் தொடர்ந்து, ஹேமந்த் சோரன் தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் அண்மையில் முறையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பெங்களூரு குண்டுவெடிப்பு வழக்கு:

# சென்னை விடுதிகளில் என்.ஐ.ஏ. சோதனை

சென்னை, ஏப். 28-

பெங்களூரு குண்டு வெடிப்பு வழக்கு தொடர்பாக சென்னை விடுதிகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

பெங்களூரில் கடந்த மார்ச் 1-ம் தேதி ராமேஸ்வரம் கஃபே என்ற உணவகத்தில் குண்டு வெடித்தது. அதில் பலர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முசாவீர் ஹூசைன் சாஹிப், அப்துல் மதீன் அகமது தாஹா ஆகிய இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், ராமேஸ்வரம் கஃபே குண்டுவெடிப்பு வழக்கு விசாரணை தொடர்பாக, சென்னையில் திருவல்லிக்கேணியில் உள்ள தங்கும் விடுதிகளில் நேற்று (ஏப். 27) என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தி விசாரணை மேற்கொண்டனர். மேலும், இந்த விசாரணைக்காக கைது செய்யப்பட்ட இருவரும் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். இந்த விசாரணை தொடர்பான முழு விவரம், பின்னர் வெளியிடப்படும் என தெரிகிறது.

# அரசியல் எதிரிகளை பழிவாங்க அமலாக்கத்துறையை பயன்படுத்துகிறது மத்திய அரசு

## சுப்ரீம் கோர்ட்டில் அரவிந்த கெஜ்ரிவால் பதில் மனு

புதுடெல்லி, ஏப். 28-

டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில் பதில்மனு தாக்கல் செய்துள்ள அரவிந்த் கெஜ்ரிவால், அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காக அமலாக்கத்துறையை மத்திய அரசு பயன்படுத்துகிறது என்று அதில் தெரிவித்துள்ளார்.

டெல்லி கலால் கொள்கை முறைகேடு வழக்கில் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறை கடந்த மார்ச் 21-ம் தேதி கைது செய்தது. தொடர்ந்து ஏப்ரல் 1-ம் தேதி முதல் அவர் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் அமலாக்கத் துறை காவலில் இருந்து விடுவிக்கக் கோரி கெஜ்ரிவால் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்திருந்தார்.

இதற்கு டெல்லி மதுபான கொள்கை ஊழலுக்குத் தலைமை ஏற்று, சதி திட்டங்கள் தீட்டியதில் முக்கிய நபராக முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் இருந்துள்ளார்.

இந்த ஊழலில் அதிகம் பயனடைந்தது ஆம் ஆத்மி கட்சி. எனவே, ஒரு குற்றத்திற்காகக் காரணத்துடன் ஒருவரை கைது செய்வது, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடைமுறையை மீறுவதாகாது என சுப்ரீம் கோர்ட்டில் அமலாக்கத்துறை பதில் அளித்தது.

அமலாக்கத்துறைக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் அரவிந்த் கெஜ்ரிவால் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், கெஜ்ரிவாலை கைது செய்து கட்சிப் பணிகளை முடக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது.

அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்து கட்சிப் பணிகளை முடக்கவும், அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காக அமலாக்கத்துறையை மத்திய அரசு பயன்படுத்துகிறது என்று கெஜ்ரிவால் சார்பில் பதில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

# மக்களுக்கு தடையின்றி.... (1-ம் பக்க தொடர்ச்சி)

வேண்டிய கடினமான சூழ்நிலையில் நாம் உள்ளோம். இதனை கருத்தில் கொண்டு அனைத்துத் துறை அலுவலர்களும் கவனமாக செயல்பட்டு குடிநீர் பிரச்சனை நிலவக்கூடிய அனைத்து பகுதிகளுக்கும் சென்று, பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும். பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

### 22 மாவட்டங்கள்...

தமிழ்நாட்டில் உள்ள 22 மாவட்டங்கள் வறட்சியால் குடிநீர் பற்றாக்குறை உள்ள மாவட்டங்களாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 150 கோடி ரூபாய் குடிநீர் விநியோகப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை தேவைக்கேற்ப மாவட்டங்களுக்கு பிரித்தளித்து, குடிநீர் வழங்கல் பணிகளையும், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் நீரேற்று நிலையங்கள் தடையின்றி தொடர்ந்து செயல்படுத்துவதற்கு, சீரான, தடை இல்லாத மின்சாரம் அவசியம். எனவே இத்தகைய திட்டப்பணிகளுக்கு மின்சாரம் தடை இன்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### முழுமையாக ஈடுபட...

ஊராட்சிப் பகுதிகளில், சிறிய குடிநீர் திட்டங்கள் மூலம் பயன்பெறக்கூடிய பல கிராமங்களில், ஆழ்துளை கிணறுகள் வறண்டு இருக்கின்றன. இவற்றுக்கு பதிலாக வேறு குடிநீர் ஆதாரங்களில் இருந்தோ அல்லது லாரிகள் மூலம் மக்களுக்கு குடிநீர் கிடைக்கப் பெறுவது உறுதி செய்யப்பட வேண்டும். ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களை இப்பணிகளில் முழுமையாக ஊரக வளர்ச்சித் துறை செயலாளரும் இயக்குனரும் ஈடுபடுத்திட வேண்டும்.

### அனைத்து துறையும்...

வாக்குப் பதிவு முடிந்தும், தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருக்க கூடிய நிலையில், இந்தப் முக்கியப் பணிகளில் எந்தவிதமான சுணக்கமும் ஏற்பட்டு விடாமல் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களையும் கண்காணித்து வருமாறு தலைமைச் செயலாளரை கேட்டுக் கொள்கின்றேன். கோடை காலத்தில் தண்ணீரின் தேவையும் அதிகம். கோடையில் தண்ணீர் கிடைப்பதும் குறைவு. இதனை மனதில் வைத்து மக்களுக்காக அனைத்து துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்" இவ்வாறு அவர் பேசினார்.